தென்றல்

ஆசிரியர் ◆ கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 3 | சென்னை | 7—7—56 | சனிக்கிழமை | இதழ் 3

ஒரு குதிரை ; அதன்மேல், இரு புறமும் சாய்ந்து கிடந்தவாறு அசைந்தாடும் ஒரு மூட்டை. அசைவிலெல்லாம் அந்த மூட்டை இசையெழுப்புகிறது. அந்த மூட்டையில் என்ன? பொன்னும் மணியும்! பின்னால் சிறு யாழ் ஒன்றைக் கரத்தேந்தி வந்தான், பாணன் ஒருவன். அவன் முகம் கதிர்தழுவிய கமலம்போல் மலர்ந்து காணப் பட்டது. உற்சாகத்தில் அவன் வாய், மெல்லப் பாடிக்கொண் டிருந்தது.

காலம் இளவேனில் ; பாதை யிலோ, பருக்கைக் கற்கள், கொடிய வன்னெஞ்சம் போல் கூராக நின்று பாதங்களைக் குத் திக் கிழித்தன. கருகிக் கிடந்த செடி கொடிகள் வேனிலின் பருவக் கோபத்தைக் காட்டின. அதனிடையிலும் ஒரு ஆலமரம்; வள்ளல்கள் உள்ளமென்ன வளர்ந்தோங்கி நிற்கிறது. அந்த மரத்தின் அடியில் ஒரு பாணன், தன் குடும்பத்தோடு அமர்ந் திருந்தான். வறுமையில் அடி பட்டு வாடி வதங்கிய மேனி; "குழவி தாய்முகம் நோக்க, தாய் தன்முகம் நோக்க," தான் யார் முகம் நோக்குவதென அறியாது வான்முகம் நோக்கிக் கிடக்கும் பயிர்போலக் கிடந்தான் அவன்.

வந்த பாணன், அவனைக் கண்டான் ; அருகினில் சென் ருன் ; துயர் கண்டு வருந்தி ஞன் ; வினவினுன் :

"ஐய, யார் நீங்கள்?"

"பாணன்!"

"துயருக்குக் காரணம்...?"

"வறுமை!"

"தங்கள் பெயர்...?"

"பொன்னியண்ணன்!"

"அருகிலிருப்பது...?"

"என் இல்லக்கிழத்தி"

"பெயர்...?"

"பூந்தாது!"

—பாணன் கண்களில் நீர் ததும்பியது. இருவரையும் உற்று நோக்கினுன். பூந்தாது எழுந்து வேறு புறம் சென்று அமர்ந்தாள். வந்த பாணன், பொன்னியண்ணன் எதிரே அமர்ந்தான்.

கண்ணதாசன்

"தமிழ்நாட! நானும் பாணன் தான். ஓய்மான் நாட்டிலிருந்து வருகிறேன். அங்கே, கிடங்கல் நகரைத் (திண்டிவனப் பகுதி) தன் கோநகராகக் கொண்டு அரசோச்சி வரும் நல்லியக் கோடன் எனும் வள்ளலைப் பார்த்துவிட்டு வருகிறேன். இடைகழிநாட்டைச் சேர்ந்த நல்லூர் என் தாயூர். கிடங்கலுக்குப் போகுமுன் நானும் உன்னைப் போலத்தான் இருந்தேன். எனக்கும் மனைவி உண்டு. எங்களுக்குச் சுவைமிக்க உணவு, "பசி"; பொலிவிழந்த இல்லத்தில், நெருப்பிழந்த அடுப்பினுள்ளே பூத்துக் கிடக்கும், காளான் ; அதனருகே, தாளாப் பசியால் சுருண்டு கிடக்கும் குக்கல் ; அதனிடம் பால் தேடி நெருங்கும் குட்டி—இது எங்கள் இல்லறம் கண்ட காட்சி. வாடிய எங்கள் வறுமை தீர்க்க ஓடி வந்தவர் இல்லை. ஆனுல் எள்ளி நகைத்தோர் பலர் ; வீட்டுக்கு வந்து விடுவோமோ என்று தங்கள் வாசற் கதவடைத்த 'வள்ளல்கள்' பலர்! இந்த நிலையில் தான் நல்லியக் கோடனின் சொல்லவொண்ணுப் பெருமைகளைக் காதாரக் கேட்டேன், நான். தேடிச் சென்றேன், அவனை; இப்போது திரும்பி வருகிறேன், பொன்னேடு!"

"அப்படியா! அவ்வளவு பெரிய வள்ளலா அவன்?"

"ஆம்! பாண! கேள். பொன்னிலங்கு மதுரையிலே புகழிலங்க அரசாளுகிருனே பாண்டியன், அவனது துறைமுகம் கொற்கை, வாணிகத்தில் வளம் பொருந்தியதெனக் கேட்டிருப்பாய். உப்புவணிகரின் வண்டியின் பின்னுல் ஓடிவருமாம் மந்தி ; அதனைப் பிள்ளைபோற் கருதி வளர்ப்பராம் வணிகர். வணிகர்தம் பிள்ளைகள், முத்துக்களைக் கிளிஞ்சல்களிற் போட்டு கிலுகிலுப்பையாக்கி விளையாடும் போது, அந்த மந்தியும் அவ்வாறு விளையாடுமாம். முத்துக்களே மதிப்பிழக்கும் அளவுக்கு, செல்வச் செழிப்புற்ற மதுரை—தமிழரசாளும் தெருக்களைப் படைத்த மதுரை—பரிசில் வழங்குவதில் தோற்ருேடும்! ஆம்; பாண்டியன் மதுரையினும் வேண்டியதை வழங்குவது நல்லியக் கோடனது கிடங்கல்!

"......... உமணர்
ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன
மந்தி மடவோர்
நகாஅர் அன்ன—
நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின்
வயிற்றகத்து அடக்கித்
தோள்புற மறைக்கு
நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஐம்பால்
உமட்டியர் ஈன்ற
கிளர்பூட் புதல்வரொடு
கிலுகிலி யாடும்
தத்துநீர் வரைப்பிற்
கொற்கைக் கோமான்
....
மகிழ்நனை மறுகின்
மதுரையும் வறிதே"

ஆம்! கோடன் தலைநகரை ஒப்பிட்டுப் பார்த்தால் மாட மதுரையும் வறியதே!

— 9-ம் பக்கம் —

எல்லாம் குழப்பம்; சொன்னால் கலக்கம்!

(2)

—கடந்த இதழில் நீங்கள் படித்தது, சொல் வலர் சம்பத் அவர்கள் பேசிய பேச்சின் முக்காற் பகுதியாகும். பின் பகுதியில் அவர், கம்யூனிஸ்டுகள் அமைத்த கூட்டணிகள் பற்றிய கேலிக்கூத்தைத் தெளிவுற விளக்கினார். ஜனநாயகப் போர்வையில் எத்தகைய சர்வாதிகாரத்துக்கு, கம்யூனிஸ்ட் கட்சி வித்தூன்றுகிறது என்பதை அழகுற எடுத்துரைத்தார்.

பல கட்சிகளையும் கொண்ட கூட்டணி அமைப்பிற்குக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி எப்பொழுதுமே தீவிர ஆயத்தம் செய்யும். அது நிறைவேறியதும் ஒவ்வொரு கட்சியாக விழுங்க ஆரம்பிக்கும். உலகத்தில் பலபகுதிகளிலும் இதுபோன்றே ஆங்காங்கு இருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகள் இயங்கிவந்திருக்கின்றன. இதற்கு ஏராளமான சான்றுகள் தர முடியும்.

இதனை எடுத்துச் சொல்லும் யார் மீதும் கம்யூனிஸ்டுக் கட்சி சாட்டும் குற்றம், "இவன் முதலாளித்துவக் கையாள்; அமெரிக்கக் கூலி" என்பதாகும். முதலாளித்துவ நாடுகளும் அவற்றிலுள்ளவர்களும் மட்டுமே இந்த **உண்மைகளை** அதிகம் எடுத்துச் சொல்லிவந்த காரணத்தாலே, சொல்கிற நல்லோர்மீதும் முதலாளித்துவ 'லேபிள்' ஒட்ட கம்யூனிஸ்டுக் கட்சியால் முடிந்தது. இந்த வாதமே முதலாளித்துவ வாதமாக்கப்பட்டது. அதனால்தான், தீவிர இடதுசாரிகளான வேறு கட்சியினர்கூட மேற்கண்டவற்றை வெளியிடாமலிருந்தார்கள். அதோடு, முதலாளித்துவ நாடுகளின் நடவடிக்கைகளுக்கு, பலம் சேர்த்துவிடக் கூடாதே என்பதும் ஒரு காரணமாகும். இத்தகு காரணங்களால், கம்யூனிஸ்டுகளின் குருதி வெறியை மறைத்த இடதுசாரிகள, தங்களது உயிர்க் கொள்கைகளின்மீதும் கம்யூனிஸ்டுகளின் கண் விழுந்துள்ள நேரத்தில், மறைக்கமுடியாது வெளியிடுகிறார்கள்.

"என்னைக் கவனிக்கிறாயா? அட தம்பீ! உன்னைத் தெரியும் எனக்கு. உலக நாடுகளில் நீ செய்த தில்லுமுல்லுகளை நான் அறிவேன். என்னிடம் வாலாட்டினால் வால் அறுபடும்!"—என்று சொல்லவேண்டிய நிலையிலிருக்கிறார்கள். இந்த நிலைக்கு அவர்களைக் கொண்டுவந்து வைத்தவர்களே கம்யூனிஸ்டுகள்தான். கம்யூனிஸ்டுகள், தங்களுக்குத் தாங்களே குழிதோண்டிக் கொண்டார்களே தவிர, மற்றவர்கள் தோண்டவில்லை. நிற்க.



சம்பத்தின் பேச்சிலிருந்து வாலுமில்லாமல் தலையுமில்லாமல் சில பகுதிகளை எடுத்துப்போட்டு 'அற்புதமான' விளக்கம தரும் தோழர் ஜீவானந்தம், சம்பத்தின் பேச்சை "அடியற்ற குடுவையின் ஆர்ப்பாட்டம்" என வர்ணிக்கிறார். இந்த அடியுள்ள குடுவை பண்ணுகிற ஆர்ப்பாட்டத்தைக் கவனிப்போம். "சம்பத் எடுத்துத் தந்த குறிப்புகள், எங்களது பழைய கால நடவடிக்கைகள் பற்றியவை; அப்போது பல்வேறு காரணங்களுககாகக் குழப்பம அடைந்தோம். அதை இப்போது ஏன் சொல்கிறீர்கள். சமீபத்திய குழப்பங்களை மட்டும் சொல்லுங்கள் பார்ப்போம்!" என்கிற மாதிரியில் சுருதியை மாற்றுகிறார் ஜீவானந்தம்—இல்லை; அடியுள்ள குடுவை!

கண்ணோட்டம்

"கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கைக் குழப்பத்தை விளக்கி, தி. மு. க. அணிகளை நம்பவைத்தால் தான், கம்யூனிஸ்டுக் கட்சியின் தேர்தல் தீர்மானத்தில் காணப்படும் ஜனநாயக உண்மைகளை அவர்கள் கண்டு கொள்ளாமல் செய்யமுடியும் என்று தி. மு. க. தலைமை மனப்பால் குடித்திருக்கிறது" என்கிறார் ஜீவானந்தம். தோழர் முழுக்க முழுககக் குருடர் ஆகிறார். பாலக்காடு தீர்மானத்திலுள்ள அந்த மகத்தான (!) ஜனநாயக (!) உண்மை(!)களை மட்டுமல்ல; அதற்கும் உள்ளே பதுங்கிக் கிடக்கும் சர்வாதிகார வெறித்தனத்தையும், இடம்பிடிக்கும் சந்தர்ப்பவாதத்தைக்கூட தி. மு. க. அணிகள் நன்கு புரிந்து வைத்திருக்கின்றன. இங்கு அணிகள் வேறு, தலைமை வேறல்ல. இரண்டும் ஒன்றை ஒன்று பிணைந்து இடப்பவைதான். தலைவர்களின் தெளிவு, அணிகளுக்கும் உண்டு. அணிகளுக்கு நன்கு தெரிந்த ஒன்றை அழகுற விளக்கித்தான் தோழர் சம்பத் பலத்த வரவேற்பைப் பெற்றார், அன்று!

கம்யூனிஸ்டுக் கட்சியைப்போல், தலைவர்கள் சுரங்கத்தையும் தொண்டர்கள் உலகத்தையும் பார்த்துக் கொண்டிருந்து, "தலைமை சொன்னது; செய்யுங்கள்!" என்று தொண்டர்களைத் தலைவர்கள் மேய்க்கும் சர்வாதிகார ஜனநாயகத்தில்தான், அணிகளை 'நம்பவைக்கும்' பிரச்சினை எழும். எந்த ஒரு பொய்யையும் அழகாகச் சொல்லி, தி. மு. க. அணிகளை நம்பவைக்க முடியாது. அது பொய்யென்று தெரிந்தால், அடுத்த கணமே கேலி செய்துவிடுவான், தி. மு. க. தோழன். கழகத்தில் இருந்து பார்ப்பவர்களுக்குத்தான் கழகத் தோழர்களின் புத்திக் கூர்மை தெரியவரும். சம்பத்தின் பேச்சு, இல்லாத ஒன்றை இட்டுக் கட்டி நம்பவைக்கும் பேச்சாக இருந்திருந்தால், அது வேறு இடங்களில் செல்லுபடியாகியிருக்கலாம். தி. மு. கழகத்தில் செல்லுபடி ஆகியிருக்காது. ஆனால் மாநில மாநாட்டில் சம்பத்தின் பேச்சு வரவேற்கப்பட்ட காட்சியைக் கண்டபோது, "யாராவது இதனைச் சொல்லமாட்டார்களா?" என்று ஏங்கிக் கிடந்தனர் தோழர்கள் என்பது தெரிய வந்தது. நிலப்பரப்பில் உருண்டு போகிற பந்தை, நல்ல விளையாட்டுக்காரன் உதைக்கும்போது கையொலி எழுவதுபோல் தெள்ளத்தெளிந்த உண்மைகளை சம்பத் அழகுறச் சொன்னதாலேதான் அங்கு கையொலி எழுந்தது.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு எப்போதுமே 'தொண்டர் தாபம்' உண்டு. தலைவர்களிடமிருந்து தொண்டர்களைப் பிரிப்பதிலே அந்தக் கட்சிக்கு ஆசை அதிகம். அந்த முயற்சியில் பல இடங்களில் பல்லுடைந்தும்கூட, இன்னும் அந்த நப்பாசை அவர்களுக்கு இருக்கிறது என்பதைத்தான் ஜீவானந்தத்தின் எழுத்து நிரூபிக்கிறது.

"சிறப்புச் சொற்பொழிவு, மொட்டை மொட்டையாக, சில ஆண்டுகளை மட்டும் நெட்டுருப் போட்டு பள்ளிமாணவன் மாதிரி ஒப்புவித்திருக்கிறது. ஏன் நுட்பதிட்பமாக உண்மை வெளிவரவில்லை?" என்று கேட்கிறார் திருவாளர் "அடியுள்ள

— 5-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 3 ‖ 7—7—56 ‖ இதழ் 3

'கிரைப் வாட்டர்' கிருஷ்ணமாச்சாரி !

உலக அரங்கில் பல திக்குகளில் தமிழர்கள் அவதியுறுகிறார்கள் என்று பொதுப்படையாகக் கூறி வந்தோம்; வரலாற்றின் வைர முகப்பில் ஒளிவிட்டுக்கொண்டிருந்த வீரமிக்க இனம், இன்று நரம்பு முறுக்கேறிப் போயிருப்போரிடம் சிக்கிக் கண்ணீர் வடிக்கிறது என்று வருத்தப்பட்டோம். இப்போது நிலைமை முற்றி செந்நீர் கொட்டும் பயங்கரக் கட்டத்திற்கு வந்திருக்கிறது இலங்கைத் தமிழர்களின் நிலைமை.

பிணங்கள் தோண்டி எடுக்கப்படுகின்றன !

பெண்கள் மானபங்கம் செய்யப்படுகின்றனர் !

சுட்டுத் தள்ளுகிறார்கள் சிங்கள வெறியர்கள் !

—என்றெல்லாம் தினசரிப் பத்திரிகைகளிலே படிக்கிறோம்; நெஞ்சம் துணுக்குறுகின்றது.

கொத்தலவாலையால் தூவப்பட்ட கொடுமை, பண்டார நாயகாவால் வளர்க்கப்பட்டு இன்று விளைவு தருகிறது சிங்களர்களுக்கு !

தமிழ்மொழி, தமிழ் கலாச்சாரம் காப்பாற்றப்பட தமிழ்ப் பகுதிகளடங்கிய ஒரு சுதந்திரத் தமிழ் நாடு அமைப்பது, இலங்கையில் ஒரு பெடரல் யூனியன் சர்க்கார் அமைப்பது என்பதை இலங்கைத் தமிழரின் பெடரல் கட்சி குறிக்கோளாகக் கொண்டிருப்பதை சிங்களர்கள் வன்மையாக எதிர்ப்பதுடன் தகாத-தரக்குறைவான எதிர் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டு வருகிறார்கள் என்பதைத் தினத்தாள்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. சிங்களமொழியைத் தமிழ்மக்கள்மீது திணிப்பதையும், அதற்கென ஒரு தனிச் சிங்கள மசோதாவைப் பண்டார நாயகா கொண்டுவந்ததையும் தமிழ்மக்கள் எதிர்ப்பதை யாரும் தடை சொல்லமுடியாது,

பண்டார நாயகாவுக்குத் தனிச் சிங்களப்பற்றுண்டு என்பதற்காக, தமிழர்பால் சிங்களத்தைத் திணிக்கவேண்டும் என்ற எண்ணங் கொண்டவர் அவர், என்பதற்காக, அந்த எண்ணத்தை ஈடேற்ற சிங்கள வெறியர்கள் பலாத்கார வழிகளைப்பின்பற்றுவதை பண்டார நாயகா பார்த்துக்கொண்டிருப்பது அநாகரீகமான செயலாகும். சாதாரணப் பண்டார நாயகாவாக இருந்தால் நமக்குக் கவலையில்லை; அவரேகூடச் சல்லடத்தைக் கட்டிக்கொண்டு களத்திலே குதிக்கலாம்-நாயகா இப்போது பிரதமர் என்பதை மறந்துவிடக்கூடாது. நன்னெறி காட்டி, தன் காலத்தைப் பொன்னெழுத்துக்களால் பொறித்துக்கொள்ள வேண்டிய பொறுப்புள்ள பதவியிலே இருப்பவர். ஆம் பிரதமர் ! அவருடைய லட்சிய சித்திக்குத் தமிழர்கள் பிணமாகித்தான் தீரவேண்டுமானால் - நாம் என்ன செய்யமுடியும் என்று நாயகா கண் மூடியாகிவிட்டால் இலங்கையின் அரசியல் சட்டப் புத்தகம் ரௌடிகளிடம் சிக்கியிருக்கிறது என்றுதான் நல்லோர் முடிவு கட்டுவர்.

விருப்பு வெறுப்பின்றி ஆராய்ந்தால், இலங்கைத் தமிழர்களின் வாக்குமூலம் எவ்வளவு நேர்மையானதாக இருக்கிறதென்பது புலனாகும் ! "சிறுபான்மையினரான தமிழர் பெருமக்கள் சிங்கள மக்களோடு ஒன்றி வாழ்வதால் தங்கள் உரிமைகளுக்கும் வாழ்விற்கும்பாது காப்புத் தேடிக்கொள்வது எளிதன்று என்ற நிலையைப் பட்டவர்த்தனமாகத் தெரிவிப்பதாகவே இந்தச் சம்பவங்கள் அமைந்துள்ளன" என்று இலங்கைத் தமிழர் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர் மனிதாபிமானம் கொண்டோர், அரசியலிலே பண்பட்ட நெஞ்சினர் இதை மறுக்கமாட்டார்கள் !

தாய்த் தமிழகத்திலே உள்ள முற்போக்குள்ளம் படைத்தோரும் இலங்கைத் தமிழர்க்கு இழைக்கப்படும் கொடுமையைக் களையவேண்டும் என்றுதுடிக்கின்றனர். "காமன் வெல்த்தில் கைகோர்த்து நிற்கும் பண்டிதரே என்ன செய்கிறீர் ? தென்னாடு வடநாடு பேதம்கூடாது என்கிறவரே, தென்னாட்டார் இலங்கையிலே பிணமாக்கப்படுகின்றாரே ஏன் மௌனம் சாதிக்கிறீர் ?" என்று கேட்கின்றனர். இதற்கான காரியங்களைச் செய்ய வகையற்ற 'போலிச் சுதந்திரச் சிற்பி'கள் நமக்குச் சமாதானம் கூற முற்படுகிறார்கள். "எங்கள் நேருவுக்கு அங்கே அவ்வளவு செல்வாக்கு ? இங்கே இத்தனை பெரிய வரவேற்பு? என்றெல்லாம் பெருமையடித்துக் கொள்ளும் 'தவப்புதல்வர்'களே ! இராவணன் மண்ணில் - நமது பாட்டன் பூமியில் தமிழன் பிணமாகிக்கொண்டிருக்கிறானே உங்களுக்குச் சூடு சுரணையில்லையா" என்று கேட்டால், சுவர்களில் எழுதி ஒட்டினால் 'இது நாடக விளம்பரம்' என்று எண்ணினேன் என்கிறார்கள். யார் அந்த 'இரக்க' சுபாவி ? வெள்ளையன் காலத்திலே வெண்துகில் உடுத்தி, வேளைக்குப் பதினாயிரம் 'சலாம்' போட்டு வாழ்வைப் புதுப்பித்துக்கொண்ட 'கிரைப் வாட்டர்' கிருஷ்ணமாச்சாரியார் (கிரைப் வாட்டர் என்ற மருந்து வியாபாரி) சொல்லியிருக்கிறார் அவ்வாறு !

எதிர்க்கட்சியைப் புரிந்துகொள்ளாதவர்களும், பிறநாட்டுச் சரித்திரங்களைத் தெரிந்துகொள்ளாதவர்களும் இந்த நாட்டு அரசியலில்தான் எப்படியோ (?) முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். டி. டி. கிருஷ்ணமாச்சாரி இதற்குச் சான்று. தென்னாட்டில் திராவிட இயக்கத்தார் வடநாட்டாரை விரட்டுவதால்தான், சிங்களவர் தமிழர்களை அங்கிருந்து விரட்டுகிறார்களாம் ! இந்தப் புத்திசாலியின் ஆராய்ச்சி இது' கிருஷ்ணமாச்சாரி குழந்தைகளுக்கு மருந்துவிற்கும் வியாபாரியாகையால் அரசியல் அறிவிலும் அவர் குழந்தையாகவே இருக்கிறார். இடையிலே இருக்கிற ஆடையை இழந்துவிடத் தயாராக இருக்கும் மானங்கெட்ட சர்க்காரைத் தென்னாட்டில் பெற்றிருக்கிற காரணத்தால்தான், இலங்கைத் தமிழர்கள் பண்போடு உரிமை கோரி நிற்கிறார்கள்; இல்லையேல் சிங்களவர்களே வெளியேறுங்கள் என்று சொல்வதற்கும், சரித்திரம் நமக்குத் துணைபுரியும் என்பதை கிரைப் வாட்டர் கிருஷ்ணமாச்சாரியார் மறந்துவிடக்கூடாது. வடநாட்டான் வெளியேறட்டும் என்று கூற திராவிடர்களுக்குள்ள உரிமை, இலங்கைத் தமிழர்களுக்குமுண்டு. வலிமைக்குறைவு அங்குள்ள தமிழர்களின் உரிமையை அரித்துத் தின்றுவிட்டது என்பது கி. கி. ஆச்சாரியாருக்குப் புரியாது.

வடநாட்டாரையும், இலங்கைத் தமிழர்களையும் ஒப்பிட்டுப் பேசுவதும், தப்பித்துக்கொள்ள முயலுவதும், கிண்டல் புரிவதும் பசிக்குப் பனம்பழம் சாப்பிடுவது போலாகும். என்பதை கிருஷ்ணமாச்சாரிக்கு எச்சரிக்கிறோம்.

★ பாண்டிமாதேவி ★

— கண்ணதாசன் —

இன்பத்தின் எல்லை தேக்கி இளங்களி றேக, மாதர்
துன்பத்தின் எல்லை தூக்கித் தொடர்ந்தனர் இல்ல நோக்கி
கண்பொத்தி ஆட வந்த காதலர் மாத ரார்தம்
துன்பத்தை ஊட லாக்கிச் சுகமெத்தைக் கழைத்துப் போனார் !

வாயிலே வையந் தேக்கும் மாதொடும் மதுரை மூதூர்த்
தாயகம் கண்ட வேந்தன் தையலுக் கொவ்வொன் றாக
சேயினுக் கன்னை சொல்லும் செய்திகள் சொன்னான் ! அன்பு
தோயுமச் செல்வி தாமும் சுவையுடன் கேட்டே வந்தாள் !

வானென்ன உயர்ந்த தெங்கள் வடிவென்ன குறைந்த தென்று
மீனெண்ணப் போகு மாபோல் விண்தொட்ட மாட மீதில்
மீனென்ன சிறந்த தெங்கள் விழியென்ன தாழ்ந்த தென்னும்
தேனுண்ட வாயர் கூடிச் சிலையென்ன ஆட லோர்பால்

பஞ்சணை மீது நாதன் படுத்திய பாட்டைத் தங்கள்
நெஞ்சணை மீது கண்டு நினைவெலாம் இனித்த மாதர்
கெஞ்சிய இடையும் மார்பும் கிழுற வையை நீரில்
துஞ்சிய இனிய காட்சி சுகக்கலை கூற லோர்பால்

நாணிய மாத ரார்க்கு நாங்களா இளைத்தோம் என்று
கோணிய வாறே தென்றற் கூட்டுற வாலே நாணும்
நாணலின் கூட்டம் வையை நதியிடை வளரும் காட்சி
வாணெடுங் கண்ணாள் காண வனப்புறும் ஓர்பால் ! அங்கு

தத்திய மாதர் தம்மைத் தன்பதி காணல் கண்டு
பொத்தினள் விழிகள்; தானும் புதைத்தனள் கண்கள்; ஆமாம்;
அத்துறை அருகில் ஆண்கள் ஆடினர்; அவரைக் காணச்
சித்திரம் விழையாள் ; அன்னாள் தென்னவன் மனையா ளன்றோ ?

முத்தங்கள் கொண்ட மாதர் முறுவல்போல் தெருவெ லாமும்
முத்தங்கள் குவிய லாகி முகப்பாரில் லாமல் வாடத்
தொத்துங்கள் என்று தோளைச் சுவையோடு கணவர்க் காக்கும்
தத்தைகள் போல வீதி தான்கூட நகைத்த தம்மா !

பொன்னொரு புறமும் பூவாப் பூவொரு புறமும், வண்ணச்
செந்நெலோர் புறமும் கொட்டித் தேடுவார் இல்லா தாகும் !
மண்ணெலாம் பொன்னே போலும் மதுரையிற் பொன்யார்
கொள்வர் !
புன்னகைப் பூவாய்ப் பூக்கும் பூவையர் பூவா கொள்வர் ?

(தொடரும்)

தேசீயம்-இது ஒரு வகை!

அன்புள்ள நண்பா,

பத்து நாட்களாயிற்றே கடிதமெழுதி, பதில் இன்னும் வரவில்லையே, காரணம் என்னவாக இருக்கும் ?–என்றெல்லாம் நீ குழம்பிக்கொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும். மனச்சாந்திக்காகவும், மனதறியாமற் செய்த தவறுகளை மறைத்துக் கொள்ளுவதற்காகவும் மனித. ஜாதியின் உள்ளம், எதை எதையோ எண்ணி, அப்படி இருக்குமா–இப்படி இருக்குமா? என்று முடிவு கட்டிக்கொண்டுவிடுகிறது. அதுபோலவே கடந்த பத்து நாட்களாக நீயும் துடித்துக்கொண்டிருப்பாய்–எனக்குத் தெரியும். காதலர்களுக்கிடையே வேலி அமைந்துவிட்டால், தனிப்பட்ட சுகவாழ்வு எரிக்கப்பட்டதே என்று அந்த இரண்டு வாலிப உள்ளங்களும் துடிக்கின்றன. ஆனால் நண்பர்கள் பிரிக்கப்பட்டால், தவறு செய்த நண்பன் உயிருக்குயிரான நண்பனின் சக்தியையும், அவனது சுற்றப்புறச் சக்தியையும் இழந்துவிட்டோமே என்று தவிக்கிறான். இங்கே, காதலைக் காட்டிலும் அன்பு சக்தி பெறுகிறது; காதலினால் ஏற்படும் பகை, காதலி இன்னொரு வீட்டுக்குப் போகும் வரைதான் உயிரோடிருக்கும்; ஆனால் முறியாத அன்புள்ளங்கள் முறிந்துவிட்டால், அந்த இடைவெளி சில வேளைகளில் எண்ணமுடியாத கல் தொலைவாகிவிடுகிறது. ஆனால் நாம் மட்டும் இந்த ஆயுள் தண்டனையிலிருந்து தப்பித்தோம் என்றுதான் சொல்ல வேண்டும். ஐந்தாண்டுக் காலத்திற்குள், தவறு

'அகில பாரதம்' சிரிக்கிறது! ஆஸ்திகக் காங்கிரஸ் துடிக்கிறது!

யாருடையது என்று கண்டு பிராயச்சித்தம் தேடிக் கொண்டோமல்லவா!

நண்ப, காங்கிரஸ் கட்சியின் போக்கு பற்றியும், அது விடுத்திருக்கும் தேர்தல் யோக்யதாம்ச அறிக்கை பற்றியும் சென்ற கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அது குறித்து நீ இந்தக் கடிதத்தில் உனது கருத்தைத் தெரிவிக்கவில்லை. ஆனால் அடுத்து ஒரு சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறாய். முதல் சந்தேக விளக்கத்தைப் பற்றிய கருத்துரை தெரிவிக்காமல், இரண்டாவது கேள்வியை எழுப்பியிருப்பதிலிருந்தே, முதல் சந்தேக விளக்கத்தை நீ ஒப்புக்கொண்டுவிட்டாய் என்று நான் முதலிலேயே முடிவு கட்டிக்கொண்டேன்.

நீ, இந்தக் கடிதத்தில் கிளப்பியிருக்கிறாயே சந்தேகம், அது பொதுவான சந்தேகமாக எனக்குப்படவில்லை. ஏதோ தனிப்பட்ட சில காரணங்களை மனதிலே எண்ணிக்கொண்டு அந்தச் சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறாய். உனது ஐயப்பாட்டை விளக்க, மதுரை மாவட்டத்து அரசியலைப் பற்றிச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

"தட்சிணப் பிரதேசத்தைப் பிரமாதப்படுத்தி வரவேற்ற பெரிய மனிதர்களெல்லாம், இப்போது, தட்சிணப் பிரதேசமா? வேண்டாம் வேண்டாம் என்று கூறத்தொடங்கியிருக்கும்போது மதுரையைச் சார்ந்த காங்கிரஸ்காரர்களில் சில பலர் மட்டும் ஏன் அதை இன்னும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும்? உட்காரணங்கள் ஏதாவது இருக்குமா?" என்று நீ கேட்டிருக்கிறாய். இது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய சிக்கலல்ல என்றாலும், மதுரைத் தேசியம் தட்சிணப் பிரதேசம் பற்றிய தகராறில் தனித்து நின்று தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள நினைக்கிறது. வெற்றியல்ல மதுரைத் தேசியத்தின் குறிக்கோள். வெற்றிக்கல்லாது ஏன் வீண் கிளர்ச்சி செய்யவேண்டும் என்று நீ எண்ணிடக்கூடும். காங்கிரஸ்காரர்கள் வேறு, மதுரைக் காங்கிரஸ்காரர்கள் வேறு.

காங்கிரஸ் ஆட்சிபீடம் ஏற்றபிறகு, நடைபெற்ற எந்த அரசியல் நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்த்தாலும் வித்தியாசம் தெரியும்; முரண்பாடு காணப்படும். காங்கிரசின் கொள்கைகளைப் பாதுகாக்கவேண்டும்; காந்தியாரை மனதிலே கொண்டு பூஜிக்கவேண்டும்; வந்தே மாதரம் கோஷமிட வேண்டும் என்பது காங்கிரசின் வெளிப்படையான கொள்கை என்று சொல்லப்படுகிறது. ஆனால் மதுரைக்கு தேசீயம் அது அல்ல. உனக்குத் தெரிந்த ஒரு காங்கிரஸ்காரரையும், அதே போது மதுரையைச் சார்ந்த ஒரு காங்கிரஸ்காரரையும் ஒரே நேரத்தில் அருகருகே வைத்துப் பார்! வேறுபாடு காண்பாய்! நாட்டைக் காட்டிலும், மக்களின் நலனைக் காட்டிலும், கட்சியைக் காட்டிலும், மதுரைத் தேசீயத்தார் எதைப் பெரிதென மதிக்கிறார்கள் என்பதை அவர்களது நெற்றியே விளக்கிச் சொல்லும். வெளிப்படையாகச் சொன்னால் மதுரைக் காங்கிரஸ்காரர்கள், காங்கிரசின் கொள்கையே, ஆஸ்தீகம் வளர்ப்பது, அரோகரா பாடுவதுதான் என்று எண்ணிப் பணியாற்றுகிறவர்கள்.

காங்கிரசின் கட்டளையை மதுரைத் தேசீயம் ஏற்றுக்கொண்டு சுறுசுறுப்பாகப் பணியாற்றுகிறதென்றால், அந்தக் கட்டளை நேருவால் பிறப்பிக்கப்பட்டு, இடையிலே உள்ள மாநில சர்க்காரால் எந்தவிதக் கருத்தும் தெரிவிக்கப்படாததாகத் தானிருக்கும். மாநில சர்க்கார் ஒரு கட்டளையைப் பிறப்பித்து அதன்படி மற்ற காங்கிரஸ் தொண்டர்களைப் போல மதுரைத் தேசீயத்தாரும் தீவிரப் பணியாற்றுகிறார்கள் என்றால், அந்தக் கட்டளையை எதிர்த்தோ, கிண்டலாகவோ ஆச்சாரியார் தன் கருத்தைத் தெரிவிக்கவில்லை என்றுதான் அர்த்தம். இதனால், ஆச்சாரியாருக்கு மதுரையிலே அமோகமான ஆதரவு இருக்கிறதென்றல்ல பொருள்! மதுரைத் தேசீயம் விரும்புகின்ற ஆஸ்தீகத்தை ஆச்சாரியார் வளர்க்கத் துடிக்கிறார்! ஆண்டவனின் பிரதம சீடர் சொல்லுகிறார்; ஆகவே அது ஏற்கத்தக்கது என்று மதுரைத் தேசீயம் முடிவு கட்டிக்கொள்கிறது. மதபீடத்தின் கட்டளையை அரசியல் ஆக்க மன்றம் நடத்திக்காட்டவேண்டுமென்பதிலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள் ஆச்சாரியாரைக் குருவென்று கருதிக் கொள்வதிலே விந்தையில்லை.

நண்ப, மதுரையிலே எத்தனையோ அரசியல் அசம்பாவிதங்கள் நடந்து முடிந்திருக்கின்றன. அத்தனையும் ஐதீக மோகத்தின் தூண்டுதலின் விளைவு என்பதை யாரும் மறுக்கமுடியாது. எதிர்க்கட்சியின் கருத்துக்கு மதிப்புக் கொடுப்பது, அதைக் கவனித்து மறுத்துரைக்க முன்வருவது என்பதே மதுரைக் காங்கிரஸ்காரர்களிடம் அறவே இல்லை. அவர்கள் தங்களுக்கென வகுத்துக்கொண்டிருக்கும் 'புரட்சி'ப் பாதையிலே இன்றும் நடை போட்டுக் கொண்டு வருகிறார்கள். இப்போது தட்சிணப் பிரதேசம் பற்றிய சிக்கலிலும் மதுரைத் தேசீயத்தார் அந்த வழியைத்தான் பின்பற்றியிருக்கிறார்கள்–அதுவும் மிகத்தீவிரமாக எதிர்ப் பிரச்சாரம் செய்துவருகிறார்கள். காரணமென்ன அதற்கு? தட்சிணப் பிரதேசம் அமைய வேண்டும், அமைந்தால்தான் தென்னாடு வளம்பெறும் என்பதல்ல மதுரைத் தேசீயத்தின் எண்ணம்! ஆஸ்தீகத்தின் காவலர் ஆச்சாரியார் தட்சிணப் பிரதேசத்தை ஆதரிக்கிறார்; ஆகவே, ஆஸ்திகத்தின் நலன் கருதியாவது ஆச்சாரியாரின் கருத்தை ஆதரித்து ஆக வேண்டும் மதுரைத் தேசீயத்தார். ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், அதற்கென ஒரு குழுவையும் அமைத்துக் கொண்டு காரியமாற்றுகிறார்கள் என்றால் அதற்கும் காரணமில்லாமலில்லை.

தட்சிணப் பிரதேசத்தைக் காமராஜர் எதிர்க்கிறார். ஆகையினால் மதுரை கொஞ்சம தீவிரம் காட்டுகிறது ஆதரிப்பதில்!

தட்சிணப் பிரதேசத்தை தி. மு. கழகம் எதிர்க்கிறது. ஆஸ்திகத்தை ஒழிக்க முற்படும் தி. மு. கழகம் எதிர்க்கிறது, ஆகவே ஆஸ்திகத்தின் பாலுள்ள பற்றுதலின் காரணமாக தட்சிணப் பிரதேசத்தை ரெட்டிப்பு உற்சாகத்தோடு ஆதரிக்கிறது மதுரைத் தேசீயம்!

ஒருவேளை தி. மு. கழகம் தட்சிணப் பிரதேசத்தை ஆதரிதிருந்தால் மதுரை எதிர்த்திருக்கக் கூடும்! அவரா இவரா என்ற பிரச்சினையைத் தான் 'மதுரை' ஆராயப் புகுந்திருக்கிறதேயன்றி, 'அதுவா இதுவா' என்பதல்ல மதுரைக்கு முக்கியம்!

உனக்குத்தான் தெரியுமே, ஒரு மோட்டார் முதலாளி கக்கனை மிரட்டி ஒரு அறிக்கை விட்டிருப்பது. எல்லாத் தேசீயப் பத்திரிகைகளும்–குறிப்பாக 'தினமணி'யும் அந்த அறிக்கையை மிகப் பெரிய எழுத்துக்களில் தலைப்புப் போட்டு வெளியிட்டிருந்தன. சாதாரண நாட்களில் அந்தத் தியாகியின் செய்திகளை நான்கு வரிகளில் பிரசுரிக்கும் தேசீயத் தினசரிகள் இந்த முறை இரண்டு பத்தித் தலைப்பிட்டுப் பிரசுரித்திருந்தன, அவருடைய அறிக்கையை. எழுதிய நபரைக் காட்டிலும் காமராஜருக்கு எதிராகக் கிளப்பியிருக்கும் எதிர்ப்பு உணர்ச்சிக்கே முக்கியத்தும் தந்து அந்த அளவுக்கு அறிக்கைகள் விரித்துப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

கக்கன் மக்களுக்குச் சரியான வழி காட்டவில்லை என்று அந்த அறிக்கை சொல்லுகிறது. கக்கன் தட்சிணப் பிரதேச அமைப்புக்கு இப்போது சூழ்நிலை சரியல்ல எனறு தெரிவித்துவிட்ட பிறகு இன்னும் என்ன கமிட்டி, ஆலோசனை, பதவி இவைகளெல்லாம்? இதிலிருந்து புரிகிறதல்லவா இந்த 'மதுரைத் தேசீயம்' ஆஸ்தீகத் தேசீயத்தினரால் அமைக்கப்பட்ட ஆண்டிமடம் என்று.

நண்ப, மதுரை ஏன் வித்தியாசப்படுகிறது அரசியல் நடவடிக்கைகளில், என்று நீ கிளப்பிய சந்தேகத்திற்கு என்னாலான விளக்கத்தை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். என் கருத்து உன மனதை திருப்திப் படுத்தும் என்பது எனது நம்பிக்கை.

அன்பு,
—முடிமன்னன்.

கண்ணதாசன் ஜூலை நிகழ்ச்சிகள்

ஜூலை 6—இராயபுரம்செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளி தமிழ் மன்றம்
ஜூலை 8—தண்டையார்பேட்டைத் திருமணம்
ஜூலை 9—ஆழ்வார்பேட்டை
ஜூலை 12—காரைக்குடி
ஜூலை 13—பாபனேரி
ஜூலை 15—திருப்பத்தூர்
ஜூலை 22—போளூர்
ஜூலை 28—சென்னை, நாடகத் தலைமை
ஜூலை 29—செங்கற்பட்டு

அடுத்த இதழில்

கண்ணதாசன் எழுதும்

பாண்டிமாதேவி
(முழுப் பக்கம்)

ஈழங்கொண்ட ராசாதி ராசன்
(வரலாற்று ஓவியம்)

மனம்போல வாழ்வு (5)

சென்னை நகர மாணவர்களுக்கு

நடைமுறையாண்டில் சென்னை நகர தி. மு. க. மாணவர் கிளையை நல்ல முறையில் இயக்குவதற்காக ஆலோசனைக் கூட்டம் ஒன்று, சென்னை, இராயபுரம் அறிவகத்தில் 8-7-56 ஞாயிறு காலை 9 மணியளவில் நடைபெற இருக்கின்றது.

சென்னை நகர தி. மு. க. மாணவர் கிளையின் பணியில் அக்கறை கொண்டோர் அன்பு கொண்டோர் அத்தனை மாணவரையும் 8-7-56 காலை 9 மணிக்கு அறிவகத்திற்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் அனைத்தும் குறைந்தது 2 பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டுகின்றேன்.

சென்னை நகரிலுள்ள அமைப்புக்குழு உறுப்பினர்கள், சென்னை நகரைச் சார்ந்த கிளைக்கழக நிர்வாகிகள் ஆகியவர்கள் தவறாமல் கலந்துகொள்ளும்படி அமைப்பாளர் டி. கே. பொன்னுவேலு கேட்டுக்கொள்கிறார்.

தியாகராயா பைன் ஆர்ட்ஸ் அகெடமி
வண்ணையம்பதி, சென்னை-11.

இலட்சிய நடிகர்

S. S. ராஜேந்திரன்

குழுவினர் அளிக்கும்

புது வெள்ளம்

(சமூக சீர்திருத்தச் சித்திரம்)

8-7-56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு

தியாகராயா கலா மண்டபத்தில்

கட்டணம் :-
ரூ. 5, 3, 2, 1, அணா 8.

எல்லாம் குழப்பம்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

ஆடும் குடுவை''. உண்மை நுட்ப திட்பமாகச் சொல்லப்பட்டதா இல்லையா என்பதை முழுப் பேச்சையும் படித்தவர்கள் நன்றாக உணர்ந்து கொண்டிருப்பார்கள்.

அப்படி நுட்பதிட்பமாகச் சொல்லப்படவில்லை என்றே வைத்துக் கொண்டு பார்ப்போம். கம்யூனிஸ்டுக் கட்சியின் சிலபல உண்மைகள் கம்யூனிஸ்டு நண்பர்களின் குடும்பத்தினருக்கே தெரிவதில்லை. எதிலும் ரகசியம்! யாரிடத்தும் சந்தேகம்!-கொலை நடந்ததைக் கண்டதாகச் சம்பத் கூறுகிறார். அது உண்மை என்கிற அளவில் ஜீவானந்தம் ஒப்புகிறார். ஆனால் கொலை நடந்ததற்கான காரணத்தையும், கொலை செய்தவன் யார் என்பதையும், கத்தி எப்படிப் பட்டது என்பதையும் சம்பத் சொல்லவில்லையே என ஜீவானந்தம் எழுதுகிறார்.

குழப்பம் ஏற்பட்டதா இல்லையா என்பதை மட்டும் சொல்வதுதான் சம்பத்தின் பேச்சின் நோக்கம். அதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டியது கம்யூனிஸ்டுகளின் வேலைதான். சம்பத் சொன்னதை ஜீவா ஒப்புக்கொண்டமைக்காக முதலில் நன்றி தெரிவிப்போம்! ஜீவானந்தத்தின் எழுத்திலிருந்து; ஜீவானந்தம் குழப்பத்தை ஒப்புக்கொள்கிறார் என்ற பொருள்தானே தெரியவருகிறது!

“மக்கள் யுத்தம் பத்திரிகையில்'' ’42ல் வெளிவந்த தலையங்கத்தையும், ’44ல் வெளிவந்த கட்டுரையையும் தூக்கி வைத்துக்கொண்டுதான் தி. மு. க. தலைமையால் ஆட முடிந்திருக்கிறது. அரசியலில் ஆனா ஆவன்னா படிக்கிற மாணவன்கூட, கம்யூனிஸ்டுக் கட்சியின் அரசியல் திட்டமும் கொள்கை அறிக்கையும் அந்தக் கட்டுரைகள் அல்ல என்று நிமிஷத்தில் கூறிவிடுவான்.''-இது ஜீவானந்தம் கைவண்ணம்.

இதன்படி, மக்கள்யுத்தம் பத்திரிகையில் தலையங்கமும் கட்டுரையும் குழப்பியிருந்ததை, ஜீவானந்தம் ஒப்புகிறார். ஆனால், அதற்கும் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சம்பந்தமில்லை என்று மட்டும் கூறுகிறார்! போகட்டும். கட்சியின் கருத்தாக இல்லாத ஒன்றை வெளியிடும் தனி நபர் சுதந்தரம் அப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்ததா? ஆச்சரியம்! உலகம் காணாத ஆச்சரியம்! ஆனால் உண்மை அதுவல்ல.

சில கருத்துக்களில், கட்சி தன் முத்திரையைப் போட்டுக்கொள்ளாது, தனி நபர்களைப் பலியாக்குவது வழக்கம். இதுதான் கம்யூனிஸ்டுக் கட்சியின் ‘நடவடிக்கை சித்தாந்தம்’! தூண்டிவிட்டது கட்சியாக இருந்தால்தான், வெளியிடப்பட்ட கருத்தின்மீது நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கும். இதை எப்படி மூடி மறைத்தாலும் “அரசியலில் ஆனா ஆவன்னா படிக்கிற மாணவன்கூட'' ஒப்புக்கொள்ள மாட்டான்.

அப்படியே, கட்சி தூண்டிவிடாமல்தான் அந்தக் கருத்து வழங்கப்பட்டது என்றால், இன்று ஜீவானந்தம் அதைக் கண்டிக்கிறார் என்று தானே பொருள்? அப்படிப் பார்த்தால், கம்யூனிஸ்டுகள் கொள்கையில் தங்களுக்குள்ளாகவே ’42 லிருந்து குழம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்? ‘அடியுள்ள குடுவை’ இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறது?

(தொடரும்)

விரைவில் மலர்கிறது!

முல்லை

இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் :-

கண்ணதாசன்

“சிந்துபைரவி'' டி. கே. சீனிவாசன் எழுதும் தொடர் கதை.

பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரின் சொல்லாராய்ச்சி.

டாக்டர் மா. ராசமாணிக்கனார் எழுதும் கட்டுரை.

பேராசிரியர் நா. பாண்டுரங்கன், எம்.ஏ. எழுதும் சொல்லோவியம்.

தென்னரசு எழுதும் சரித்திரக் குறுநாவல்.

ஆசிரியர் எழுதும் கவிதை, கட்டுரை, கதை, நாடகம்.

மூவர்ண அட்டை-

‘தென்றல்’ ஓவியர் ராசன், ‘திரை’ உலக ஓவியர் ‘நாத்’ முதலியோர் தரும் ஓவியங்கள்.

ஏஜன்சி & விளம்பரம் சுற்றுப்பயண நிர்வாகி :
அண்ணன் இராம. சுப்பையா அவர்கள்.

தென்றல் தரும் பயனை எல்லாம் முல்லை தரும்.

விலை அணா எட்டு.

★

விபரங்களுக்கு :

‘முல்லை’ காரியாலயம்,

2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

பார்வையைப் பெரிதாக்கும் வானம் முழுதும் நீலப்போர்வை. நீலப்போர்வையணிந்த அந்த வானத்திலே மேகங்கள் மிதந்து கொண்டிருந்தன. இல்லை யில்லை...! ஊர்வலத்தில் மோகனமான கல்யாணப்பெண் தன் கட்டை விரலிலே கண்களையும் கட்டவிழ்ந்துபோன மகிழ்ச்சியிலே கருத்தையும் பதித்து களினமாக அடியெடுத்து வைத்து நடந்து போவது போல அந்த மேகங்கள் மெதுவாக, ஊர்ந்து கொண்டிருந்தன.

கீழே—

மலை மலையாய் எழுந்த பேரலைகள் கடலிலிருந்து கிளம்பி கரையிலிருந்த பாறைகளில் மோதி ஓவென்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தன.

பாறைகளில் கொஞ்ச தூரத்தில் சில பச்சைமரங்கள் குடைகளை விரித்ததுபோல் நின்றுகொண்டிருந்தன.

ஒரு கிளையில் இரண்டு வெண்புருக்கள்.

ஒன்று பெண் புரு.

மற்றது ஆண் புரு.

படமெடுத்த நாகம் பின்புறமாகச் சாய்ந்து முன்புறமாக நெளிவது போல் கழுத்தை அசைத்து அந்த வெண்புருக்கள் இரண்டும் பேசிக் கொண்டிருந்தன. பெண்புரு ஆண்புருவைப் பார்த்துக் கேட்டது.

'இந்த அலைகள் ஏன் இப்படித் துடிக்கின்றன ?''

ஆண்புரு அதற்குப் பதில் சொல்லியது.

''விடுதலையான புருவைப் பார்த்தால் கூண்டில் சிறைப்பட்ட புரு கூக்குரலிடத்தானே செய்யும்?''

இந்தப் பதில் பெண்புருவுக்குப் புரியவில்லை. ஆண்புரு சிரித்துக் கொண்டே விளக்கியது.

''மேலே மேகங்களைப் பார்! கடல் என்பது கூண்டு. கடற் கூண்டிலிருந்து மேகங்கள் விடுதலை அடைந்துவிட்டன. அதனால்தான் அதைப் பார்த்தும் இன்னும் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் அலைகள் கூச்சலிட்டுத் துடிக்கின்றன !''

பெண்புரு 'களுக்'கென்று சிரித்தது. ஆண்புருவிடமிருந்த சிரிப்பு மறைந்தது. பெண்புரு பேசியது.

''அப்படியானால் நான் கேள்விப் பட்டது பொய்தான் !''

''என்னதான் நீ கேள்விப்பட்டாய் ?''

''வானம் ஓர் எஜமானன். காற்று தோட்டக்காரன். கடல் ஒரு குளம். மேகம் என்பது பூவாளி. உலகம் ஒரு பூச்செடி !...தோட்டக்காரன், எஜமானன் உத்தரவுப்படி குளத்தில் தண்ணீர் மொண்டு, பூச்செடிக்குப் பூவாளியால் ஊற்றுகிறான். மனிதர்கள் இதை மழை என்கிறார்கள். ஆகவே, மேகங்கள் என்பவை பறக்கும் பூவாளிகள்!''

''இது வெறுங் கற்பனை !''

''நீங்கள் சொல்லியதோ கதை!''

''கதையில் கற்பனை உண்டு. கற்பனையே ஒரு கதைதான். ஆகவே இரண்டும் சரிதான் !''...

இப்போது பெண்புருவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ''மேகங்களிடமே சென்று பேச்சுக் கொடுப்போமே. தங்களைப் பற்றி அவை என்ன சொல்லுகின்றன என்று கேட்டால் என்ன ?''என்று பெண் புரு கேட்டது. சாரங்கதரன் காலத்திலிருந்து புரு உலகில் கொடி கட்டிப் பறக்கும் அந்தப் பாட்டு—அதன் ஓரடியை ஆண்புரு சிரித்துக் கொண்டே முணு முணுத்தது.

''மேகமண்டலம் தாண்டிப் பறக்கும் என் வெண்புருவே...'' இந்தப் பாட்டடியைக் கேட்டுப் பெண்புரு 'களுக்'கென்று சிரித்தது. பிறகு? படபடவென்று இறக்கைகள் அடித்துக்கொண்டன. மடமடவென்று புருக்கள் இரண்டும் உயரே கிளம்பி மறையத் தொடங்கின.

மெதுவாய் வீசிக்கொண்டிருந்த மென்காற்றில் மேகங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவைகளின் வேகத்திலேயே அருகில் அந்த வெண்புருக்களும் பறந்து கொண்டிருந்தன. பெண்புரு தன் அலகைத் திறந்து அழகாகக் கேட்டது.

''எழில் மேகங்களே ! எங்கே நீங்கள் போகிறீர்கள் ?'' தங்களை விசாரிப்பவைகளைப் பார்த்தன மேகங்கள். பொங்கியெழுந்த சந்தோஷத்தாலோ, சஞ்சலத்தாலோ அந்த மேகங்கள் விரிந்து விசாலமாயின. மூச்சை அடக்கிப் பேசைத் தொடங்கியது ஒரு மேகம்.

''எங்கேயும் போகவில்லை-இங்கு மங்கும் அலைகிறோம் ?''

''ஏன் ?''

''பிறப்பிக்கப் பெற்றோம் - ஆகையால் !''

''என்ன என்ன ? இன்னொரு தடவை சொல்லுங்கள்.''

''அது ஒரு காதல் காவியம்...''

''சொல்லோவியமாக்குங்களேன் —கேட்போம் !''

''கேளுங்கள் !- குதிக்கும் நீருக்கும் கொதிக்கும் நெருப்புக்கும் காதல் பிறந்தது. அருகே வரா மலே அணைத்து மகிழவேண்டும். தொட்டு விடாமலே கட்டிப் பிடிக்க வேண்டும். இப்படி இந்த இரண்டு பேருக்கும் ஆசை. ஆனால்...? இவர்களுக்கு இடையிலோ லட்சோபலட்சம் மைல்கள், தூரம் ! விடுகதையல்ல இது; விசித்திரமான கற்பனையுமல்ல. நெடுநாளாய் நடந்து வரும் வேடிக்கை !''

''நகரும் மேகங்களே, நகைப்பு தான் வருகிறது எங்களுக்கு ! நடக்காதா அவர்களின் ஆசை ?''

''ஆசை நிறைவேறுவதுமட்டு மல்ல - ஓசைப்படாமல் குழந்தைகளும் பிறந்துகொண்டிருக்கின்றன, அந்தக் காதலர்களுக்கு !''

''நம்பமுடியாது !''

''எங்களை நீங்கள் நம்பமுடிகிறதல்லவா ?''

''எதிரே உங்களைப் பார்க்கிறோமே-எப்படி நம்பாமல் இருப்பது ?''

''அப்படியானால் நாங்கள் சொன்னதையும் நம்பவேண்டியதுதான்''

''எப்படி ?''

''அந்தக் காதலர்களின் குழந்தைகள் வேறு யாவருமல்ல, மேகங்களாகிய நாங்கள்தாம் !...இங்கே, கீழே குதிக்கும் அலைகளையுடைய கடல்தான் எங்கள் தாய் ! அங்கே எவ்வளவோ உயரத்தில் இருந்து கொதிக்கும் சூரியன்தான் எங்கள் தந்தை! பிறந்ததுமே விரட்டியடித்த தாய்-மறந்தும் தன்னிடம் அழைத்து ஆறுதல் சொல்லாத தந்தை......''!

''விசித்திரமான பெற்றோர்களுக்கு விநோதமான பிள்ளைகள்.''

''விபரீதமான தொல்லைகள் - என்று சேர்த்துச் சொல் வெண்புருவே-சேர்த்துச் சொல் !''

பெண்புரு என்ன நினைத்ததோ தெரியவில்லை. கழுத்தைத் திருப்பி ஆண்புருவைப் பார்த்தது. இப்போது ஆண்புருவே மளமளவென்று பேசிற்று.

''உயரத்தைக் கிட்டுபவர்களையே அமைதி விட்டுவிடும் என்பார்கள். எங்களுக்கு வேண்டுமானால் இது பொருந்தலாம். ஆனால், மேகங்களே ! உங்களுக்கு......''

'நிறுத்துங்கள் ! — எண்ணினால் மயக்கம் வரும் எங்கள் புண்ணை நிலை உங்களுக்குத் தெரியாது !''

பரிதாபத்தோடு பார்த்தது ஆண் புரு. பேசியது.

''கார்மேகங்களே ! காலியான பட்டணம் போலல்லவா வெறிச் சென்று காணப்படும் வானம்! நீங்கள் அதை விட்டு விலகி மறைந்துவிட்டால் !

அநுபவிப்பவர்கள் உணர்வது போல் அந்தப் பலனை, அளிப்பவர்களும் உணர்வதுதான் அருமையாய் இருக்கிறது. அப்படி உணர்ந்தால்...? மதுவின் சுவையை அதை மொண்டு உண்ணும் வண்டுதான் உணர்கிறது என்பதில்லை. அளிக்கும் தாமரையே அதன் பெருமையை உணர்கிறது. அதனால்தான் சிரிப்புடனும் சிறப்புடனும் காலை பிறந்ததுமே தினம் தினம் காணப்படுகிறது தாமரை !

பார்க்கும்போதே பல வடிவெடுக்கும் மேகங்களே! சித்தாந்தியும் உங்களிடம் மனதை இழக்கிறான், புத்தியில்லாதவனும் உங்களின் வனப்பைப் பார்த்துச் சித்திரத்திலுள்ள சிலையாகி விடுகிறான். காவியக்காரனுக்கு ஏட்டில் ஓவியம் தருவதும், ஓவியக்காரனுக்குத் திரையில் காவியம் தருவதும் உங்கள் உருவந்தானே. இன்னும் கேளுங்கள் ! அடிமேல் அடிவைத்துச் செல்லும் தண்ணீருக்கு உயரே ஆகாயத்தில் நிற்கும் மீன்கொத்திப் பறவையின் இறக்கைகளில் உள்ள அந்தத் துடி துடிப்பு-அதைத் தன் நெஞ்சில் புகுத்திக்கொண்டு தாபம் நிறைந்த காதலன் நெருங்குகிறான். மீன்விழியாளின் நிலாமுகம் நாணத்தால் கவிழ்கிறது. இதைப் பார்த்து வெட்கத்தால் துடி துடிக்கும் மாலை நிலா தன் உடலை ஒளித்து மறைத்துக்கொள்ள மேகத்திரைகள் தாமே உதவுகின்றன !

பழந்தின்னும் வௌவால்கள் எங்களுக்குப் பலதடவை சொல்லியிருக்கின்றன. கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்களும், எண்ணத்தில் விழ்ந்தவனைப்போல் காணப்படும் வெண்ணிலாவும் மட்டுமே வானத்திலிருந்திருந்தால், பார்வையில் சலிப்பு குழந்தைப் பருவத்திலேயே வேர் விட்டிருக்கும். ஆனால்...? மேயும் நட்சத்திரங்களும் காயும் நிலவும் பார்க்கப் பார்க்க ஆவலை வளர்த்துவளர்த்து விடுவதன் காரணமென்ன ? விதவிதமாகச் சிதறி, மேகங்கள் புதுப்புது இடங்களில் படிவதுதான் !

மேகங்களே ! நீங்கள் சிறுவர்கள் நினைக்கிறபடியெல்லாம் உருவங்கள் எடுக்கிறீர்கள்-நீங்கள் உருவங்கள் எடுக்கிறபடியெல்லாம் சிறுவர்கள் நினைக்கிறார்கள், அதனால் அவர்கள் சிரித்து மகிழ்கிறார்கள் !

கருமேகங்கள் ஓடுகின்றன. பார்த்து கலாப மயில் ஆடுகிறது. மயிலாடக் கண்டு மழலைப் பிள்ளை கைகொட்டி ஆடுகிறது. பிள்ளை ஆடுவது கண்டு தாயின் முகத்தில் சிரிப்பு விளையாடுகிறது. இதைக் கண்டு தந்தையின் அகத்திலெல்லாம் மகிழ்ச்சி ஓடுகிறது. இக்காட்சியைக் கண்டு இல்லறம் பாடுகிறது. இல்லறம் பாடுவதால் எல்லா அறமும் அங்கே கூடுகின்றன !......''

—ஆண்புரு இப்படிப் பேசிக் கொண்டே இருந்தது. இரண்டு புருக்களுமே மிதந்துகொண்டுதான் பறந்துகொண்டிருந்தன. ஆனால்...? திடீரென்று மேகங்கள் அவிழ்த்து விட்ட கன்றுகளைப்போல் அவசரமாக ஓடின, புருக்களின் சிறகடிப்பிலும் புள்ளி மானின் கால்களின் வேகம் புகுந்தது. ஆண்புரு அப்போதும் பேச்சை நிறுத்தவில்லை. பேசிக்கொண்டே இருந்தது

''உங்களுக்குப் பீடுகள் இவ்வளவு உள்ளன, மேகங்களே ! நீங்கள் வாடுவதாகச் சொல்கிறீர்களே; இதில் உண்மையை நாங்கள் எங்கே தேடுவது ?''

''வெண்புருக்களே ! வேதனை எங்களை வெந்து மடியவைக்கிறது. நீங்களோ சொற்களை அடுக்கி...''

''தவறு ! சொற்களை அடுக்கினால் அகராதிதான் உருவாகும். நாங்கள் சொற்களை அடுக்கவில்லை-கருத்துக்களையே தொடுக்கிறோம், உண்மையை அழகாக எடுத்துச் சொல்ல ! ஏன் இப்படித் திடீரென்று ஓடுகிறீர்கள் ? என்ன வேதனை உங்களுக்கு ?''

''தாய் தந்தையர்கள் கண்ணெதிரே தெரிந்தும் நாங்கள் அனாதைப் பேய்களாய் விண்ணில் அலைந்து திரிகிறோம். இல்லை, அலைந்து திரிகிறோம் என்பது அவ்வளவும் பொய். ஆமாம். பொய்தான் - பொய் ! கண்ட கண்டபடி உழைக்கும் காற்றுக் கேற்ப உருண்டோடும் கால் பந்துகள் நாங்கள் ! கலக்கம்-கவலை-கஷ்டம், எங்கள் உள்ளத்தில்-இடத்தில் - உடலில் ! எதற்காகப் பிறப்பிக்க வேண்டும் எங்களை ?''

''ஏன் பிறந்தோம் என்று கேட்கிறீர்களா ? பிறந்த உங்களுக்கு மட்டுமல்ல, பிறப்பித்தவர்களுக்கே அந்தக் கேள்விக்குப் பதில் தெரியாதே !''

''அப்படியானால் கொட்டுவதைக் கும் வாழ்க்கையை விட்டு விலகி விட்டால் என்ன ?''

— 11-ம் பக்கம் —

முன் கதை

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள். அன்றுதான் தியாகி தேசானந்தர் சிறையிலிருந்து விடுதலை பெற்ருர். அவர் விடுதலை அடைந்த் அந்த நாளில் வண்ணையம்பதியில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் தியாகி தேசானந்தர் சொற்பொழிவாற்றிஞர். மக்கள் ஏக ஆரவாரம் செய்தனர்.

கூட்டம் முடிந்தது. அன்றைக்கே தேசானந்தர் தம் சொந்த ஊரான மேலூருக்குப் புறப்பட்டார். அவர் ஏறிய ரயிலிலேயே, அவரைத் தொடர்ந்து ஒரு பெண், அவசர அவசரமாக ஏறிக்கொண்டாள். போர்ட்டர் அவளது பெட்டியைக் கொண்டு வந்து ரயில் பெட்டியில் வைத்துவிட்டுச் சென்ருன். அந்தப் பெண்ணின் முகம் வெளிறி இருந்தது. அவள் உடம்பிலே இரத்தமே இல்லை. உட்காருவதற்கு இடமின்றித் தவித்தாள். தேசானந்தர் கொஞ்சம் விலகி உட்கார்ந்து கொண்டு அந்தப் பெண்ணுக்குச் சிறிது இடம் தந்தார்.

தேசானந்தர் அந்தப் பெண்ணுடன் உரையாட ஆரம்பித்தார். அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்களை அவளிடமிருந்தே கிரகித்துக்கொண்டார். பின் அவர் தூங்கிவிட்டார். திருச்சியில் விழித்துப் பார்த்தபோது அந்தப் பெண்ணை வண்டியில் காணேம். அவளது பெட்டி மட்டும் இருந்தது. பெட்டியுடன் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார் அவர். அந்தப் பெட்டியைக் கண்ட அவரது மனைவி கோமளம் "அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது ?" என்று வினவிஞள். தேசானந்தர் அந்தப் பெட்டியையும்—பெட்டி கொண்டு வந்த பெண்மணியையும்—அவள் அதனை ரயில்பெட்டியில் வைத்துச் சென்றுவிட்ட வரலாற்றையும் சொல்லி முடித்தார். அத்துடன் அந்தப் பெண்ணின் கணவனது முகவரி தனக்குத் தெரியும் என்றும் அதை அவனிடம் திருப்பச் சேர்த்துவிடலாம் என்றும் சொன்ஞர். கணவனது பதிலை எதிர்பாராமலேயே பெட்டியைத் திறந்த கோமளம், 'ஆ' என்று அலறிஞள். என்ன ஆச்சர்யம்? பெட்டிக்குள் ஒரு குழந்தை கிடந்தது. தேசானந்தர் திகைத்து விட்டார். அதனருகில் கிடந்த கடிதத்தைப் பிரித்தார்; படித்தார்.

ரயிலில் அவர் சந்தித்த பெண்தான் அந்தக் கடிதத்தை எழுதியிருந்தாள். தேசபக்தர் சூடாமணியை நம்பித் தன் வாழ்வை வீணுக்கிக் கொண்ட வேதனைமிகுந்த வரலாற்றை அவள் கடிதத்தில் வரைந்திருந்தாள்.

4

என் மனம் சங்கடப்பட்டது. நம் வாழ்வுதான் கெட்டது என்ருல், நாம் ஏன் அவர் வாழ்வையும் கெடுக்க வேண்டும் ? ஆனல் கெடுக்கவேண்டுமென்று நினைத்துச் சொல்லவில்லை என் கதையை! அனுதாபப்பட்ட ஒருத்தியிடம் விவரங்களைச் சொல்லப் போய், அது அவர் திருமணத்தையே கெடுத்துவிடும்போலிருக்கிறதே என்று வருந்தினேன். என்ருலும் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருந்தேன். அன்று இரவே நடுநிசியில் அந்த வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன். பிரசவ ஆஸ்பத்திரியில் போய்ச் சேர்ந்தேன். ஒரு வாரத்திற்குப் பிறகு இந்தக் குழந்தையை ஈன்றெடுத்தேன்.

என் பிரசவத்தன்றுதான் சூடாமணிக்குத் திருமணம். திருமணம் எப்படி நடந்ததோ என்னவோ என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தேன். ஆஸ்பத்திரியில் எனக்கு உறுதுணையாக விளங்கிய 'நர்ஸ்' ஒருத்தியைக் கூப்பிட்டு, விவரங்களைச் சொல்லி, திருமண வீட்டிற்குப் போய் விசாரித்து வரச் சொன்னேன். போய்த் திரும்பிய அவள், நடந்தவற்றைக் கதை கதையாகச் சொன்ஞள். மணமேடைக்கு வருகிறவரை மணப் பெண் பேசாமலேயே இருந்தாளாம். சூடாமணி எழுந்து தாலி கட்டப் போகும் போது 'நில்' என்று கத்திஞளாம். திருமணத்திற்கு வந்திருந்தவர்கள் திகைத்தார்களாம். அவள், 'நான் உன்னை மணந்துகொள்ள மாட்டேன்' என்று கூறி, ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தாளாம். செய்துவிட்டு உடனே வெளியேறிவிட்டாளாம். சூடாமணி ஆத்திரமே உருவாக நின்ருராம். என்னை எங்கே கண்டாலும் கொன்று விடுவது, என்று கூடக் கூறிஞராம். இதை நான் எதிர்பார்த்தேன். ஆகவே பெருத்த அதிர்ச்சியடையவில்லை. என் வாழ்வைக் கெடுத்தார் அவர். தன் வாழ்வும் கெட்டதால் தடுமாறுகிருர். அவரை மீண்டும் பார்க்கவோ, சமாதானம் கூறவோ நான் தயாராயில்லை.

அதற்குப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு, பச்சிளங் குழந்தையைக் கையில் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தேன். அங்கிருந்துதான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இனி எந்தப் பாதை எனக்காகத் திறந்திருக்கப் போகிறது ? நானே அவதிப்படும் போது, குழந்தையை வேறு எப்படிக் கவனிப்பேன் ? அப்படித்தான் இந்தக் குழந்தையென்ன, எண்ணி எண்ணி மகிழத்தக்க வகையிலேயா பிறந்தது? நான் கொலைகாரியானேன் !—சுலபமாகச் சொல்லி விட்டேன் ! ஆனல், குழந்தையின் கழுத்தை முறிக்கும்போது என் மனம் பட்ட பாடு...! அதைத் தெரிவிக்க எந்த மொழியில் வார்த்தையிருக்கிறது ?

நீங்கள் சொல்வீர்கள், 'பைத்தியக்காரி; வாழத் தெரியாதவள் ! அப்படியேதான் நடந்துவிட்டாலென்ன ? என்ன குடி முழுகிப் போய்விட்டது?' என்று! அனுபவிப்பவர்களுக்குத் தான் தொல்லையின் கொடுமை தெரியும். அருகிலிருந்து ஆறுதல் சொல்பவர்களுக்கு அழகழகான தத்துவங்கள் வரும், அந்தத் தொல்லையில் அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாததால்!

என்னைப் பொறுத்தவரை இதுதான் சரியான முடிவு என்று தீர்மானித்தேன். நான் எங்கே போகிறேன் ! எனக்கே தெரியாது ! இந்தக் கடிதத்தைப் பார்ப்பவர்கள் யாரும் என்னைத் தேட எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ள வேண்டாம். சூடாமணிக்கும் எந்தவிதத் தொல்லையையும் தரவேண்டாம். ஒரு கதை படித்ததாக எண்ணி, கடிதத்தைக் கிழித்துவிடுங்கள். குழந்தையைப் புதைத்து விடுங்கள்.

இப்படிக்கு,
'சீதா.''

—படித்து முடித்தார் தேசானந்தர். அவரது தங்கை சரசுவைத் தேடிப்போன அன்னியும் கண்மணியும் அத்தையைக் கையோடு அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தார்கள். அண்ணுவை வரவேற்ருள் தங்கை. தேசானந்தர் அரைகுறையாக 'ஆமாம்' போட்டுவிட்டு, சிந்தனையில் மூழ்கிஞர். குற்றவாளிகள் மட்டுமே நிரம்பிய இடத்தில் மூன்ருண்டுகள் வாழ்ந்தவராதலால், குற்றம் பொல்லாததாகத் தெரியவில்லை அவருக்கு! ஆனல் அந்தக் குற்றத்தின் விளைவு, கொடுமையாகத தட்டுப்பட்டது அவருக்கு. கோமளத்தின் முகத்தைப் பார்த்தார். கோமளம் குழந்தையைப் பார்த்தாள். சரசு இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். பிறகு குழந்தையை ஒரு துண்டில் வைத்துச் சுற்றி, தோட்டத்தில் கொண்டு புதைத்தார்.

கடிதத்திலிருந்த செய்திகளிலிருந்து அந்தப் பெண் தன்னிடம் சொன்னதெல்லாம் பொய் என்று உணர்ந்துகொண்டார் தேசானந்தர். அன்று இரவே சென்னைக்குத் திரும்ப விரும்பிஞர். தேச விடுதலையில் ஈடுபட விரும்பும் ஒருவன் இத்தகைய தீய காரியத்தைச் செய்யலாமா என்று கொதித்தார். அன்றைக்கே அவர் சென்னைக்குத் திரும்புவதைக் கோமளம் கொஞ்சங்கூட விரும்பவில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிருர். ஒரு நாளாவது—நாளென்ன—ஒரு இரவாவது

வீட்டில் தங்காமல் 'புறப்படுகிறேன்' என்கிருரே! எப்படிச் சம்மதிப்பாள் கோமளம்? இந்தத் தேசத்தொண்டு என்பதே இப்படித்தான்! ஒரு முத்தத்துக்கும் மறு முத்தத்துக்கும் இடையிலே கூட, திடீரென்று ஒரு கூட்டத்தில் பேசவேண்டியிருக்கும்!

கடைசியில், தேசானந்தர் தன் மனைவி குனிந்தும் நிமிர்ந்தும் சொன்ன வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டார். இரண்டு நாட்கள் அங்கேயே தங்க முடிவு செய்தார். கோமளம் பெட்டியிலிருந்த அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்டு நாத்தனுரோடு உட்கார்ந்து படித்துப் பார்த்தாள். இருவரும் சீதாவிற்காகக் கொஞ்ச நேரம் வருந்தினர்கள். அன்று இரவு கோமளமும் தேசானந்தரும் குதூகலமாக இருந்தார்கள். இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு கூட ஒரு 'முதல் இரவு' வந்தது அவர்களுக்கு. நீண்ட நாள் பிரிவுக்குப் பிறகு வரும் எந்த இரவும் முதல் இரவு தானே?

இரண்டு நாட்களுக்குப் பிறகு தேசானந்தர், மனைவி மக்களிடமும் தங்கையிடமும் விடை பெற்றுக்கொண்டு, சென்னைக்குப் பயணமானுர். காரைக்குடியில் வந்து ரயில் ஏறினுர். ரயிலில் முதல் வகுப்புப் பெட்டியில் அவருக்கு எதிரே ஒரு வாலிபர் அமர்ந்திருந்தார். ரயிலில் ஏறி உட்கார்ந்த தேசானந்தரைப் பார்த்து 'இது என்ன ஊர்?' என்று கேட்டார் அவர். 'காரைக்குடி' என்று பதிலிறுத்த தேசானந்தர், கொஞ்சநேரம், மௌனமாக இருந்தார். பிறகு பேச்சுக் கொடுக்கத் தொடங்கினுர். "காரைக்குடியை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அழகு மிகுந்த அந்த நகரத்தில் தேச விடுதலைப் போர்வீரர்கள் பலர் இருக்கிருர்கள். தேசத்திற்காக எந்தத் தொல்லையையும் அனுபவிக்க அவர்கள் தயங்கமாட்டார்கள். முழுக்க முழுக்கக் கதராடைதான் அணிவார்கள். இப்போது பாருங்கள், நீங்கள் சில்க் சட்டை போட்டிருக்கிறீர்கள்! சில்க் என்பது வெள்ளைக்காரன் நாட்டிலிருந்து வருவது. வெள்ளைக்காரன், அவன், நமக்கு எஜமானன் என்று நினைத்துக் கொண்டிருக்கிருன். நாம் அடிமைகளாம். நம் தோல் கருப்பாம். அவன் தோல் சிகப்பாம்! அவனுடைய தொழிலுக்கு நாம் ஆக்கம் கொடுக்கலாமா? கூடாது! உங்களைப் போன்ற வாலிபர்களே இப்படிச் செய்தால் நாட்டுக்குச் சுதந்திரம் எப்படி வரும்?"

—அந்த வாலிபன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு குறும்பாக ஒரு கேள்வியைக் கேட்டான்.

"சுதந்திரம் என்ருல் என்ன?"

—தேசானந்தர் திகைத்தார்.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? சுதந்திரம் என்ருல் விடுதலை! நம் நாட்டை நாமே ஆள்வது! 'ஆயிரம் உண்டிங்கு சாதி! எனில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி?' உங்களைப் போன்ற வாலிபர்கள் இதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிருர்களே!"

—அவர் அந்த வாலிபருக்காக மிகவும் வருத்தப்பட்டார். அந்த வாலிபர் வழவழமைதியாக, 'எங்களுக்கு இதிலெல்லாம் அக்கறையில்லை! நன்கு படித்துக் கல்வித் துறையில் முன்னேற வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை' என்ருர். தேசானந்தர் சிரித்தார். "படிப்பு, படிப்பு!" இந்த ஆங்கிலப் படிப்பு ஒழிந்தாலே நம் நாட்டுக்கு விடுதலை வந்துவிடும்! அதனுல்தானே உங்கள் மனமெல்லாம் கெட்டுப் போயிருக்கிறது' காந்திஜி, நேருஜிபோன்ற தலைவர்களைச் சிறையில் நன்ருவதைப் பார்த்தும் கூட, நீங்கள் 'படிப்பு, படிப்பு' என்று உயிரை விடுகிறீர்களே! படிப்பைக் கொஞ்ச காலம் நிறுத்திவிட்டு, வெள்ளைக்காரனை விரட்டுவதில் துணை புரிந்தாலென்ன?" என்ருர் அழுத்தந் திருத்தமாக!

பேச்சு இப்படியே நீடித்த போது, வண்டி புதுக்கோட்டையில் வந்து நின்றது. அந்த வாலிபர் பெட்டி படுக்கையோடு கீழே இறங்கினுர். உடனேயே இன்னெரு வாலிபரும், ஒரு இளம் பெண்ணும் அந்தப் பெட்டியில் ஏறினுர்கள். தேசானந்தர் மீண்டும் பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்தது என்று மகிழ்ந்தார். புதுக்கோட்டையில் ஏறிய வாலிபன் டார்ப்பதற்கு அழகாக இருந்தான். அவன் கூட வந்த குமரி சினிமாக்காரி போல் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். இருவரும் சிரித்துச்சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். உற்சாகமான அந்தக் காதலர்களை ஆச்சரியத்தோடு நோக்கினுர் தேசானந்தர்.

'உலகத்திலே துன்பம் என்பதாக ஒன்றுமே இல்லை' என்று முடிவுகட்டிக் கொண்டவர்கள் போல, அந்தக் காதலர்கள் காணப்பட்டார்கள். இளம் பருவத்தின் துடிப்பு, குறுகிய காலத்திற்காவது எவ்வளவு சுவையான வாழ்க்கையைத் தந்துவிடுகிறது! எதிர்த்தாற்போல் ஒருவர் உட்கார்ந்திருக்கிருர் என்ற கவனமே இல்லாது அவன் அவள் கன்னத்தைத் தட்டுகிருன். அவள் அந்தக் கையை முறித்துவிடுபவள் போல் பிடித்துக் கொள்கிருள். மனிதனுக்கு இந்த ஆசை ஒன்றில்தான் வெட்கம் ஏற்படுவதில்லை.

வண்டி புதுக்கோட்டையை விட்டுப் புறப்பட்டது. இளங் காதலர்கள் எதை யெதையோ பேசிக்கொண்டு வந்தார்கள். இடையிலே திடீரென்று புகுந்தார் தேசானந்தர்.

"எதுவரைக்கும் போகிறீர்கள்" என்று கேட்டார். அந்த வாலிபன் சாவதானமாக, 'திருச்சிக்கு' என்று பதிலிறுத்தான்.

"சொந்த ஊரே அதுதானு" என்று கேட்டார். எந்த ஊராயிருந்தால் இவருக்கென்ன? பேச்சை முறையாக ஆரம்பிக்க வேண்டுமல்லவா, அதற்காகக் கேட்டார்.

"இல்லை, சென்னை!" என்று பதிலிறுத்தான் அவன். அதற்கு மேல் அவரோடு பேச விரும்பாதவன்போல் தன் காதலியின் பக்கம் திரும்பிக் கதையளக்க ஆரம்பித்தான். அவனைக் கூர்ந்து கவனித்தார் தேசானந்தர். அவன் கதராடை அணிந்திருந்தான். 'காங்கிரஸில் பற்றுக் கொண்டவன்போலும்' என்று எண்ணி அவனோடுஅதிகம் பேச ஆசைப்பட்டார் தேசானந்தர்.

"அம்மா யாரு?" என்று அவனிடம் கேட்டார். அவனும் அவளும் ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

"தெரியாமல் தான் கேட்கிறேன்! தப்பாயிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்!" என்று கூறிவிட்டுப் பதிலை எதிர்பார்த்தார் தேசானந்தர்.

'என் மனைவி' என்ருன் அவன். அவள் சன்னலில் வைத்திருந்த தன் கைகளுக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். அதற்குமேல் என்ன பேசுவது என்று தெரியாமல் தேசானந்தர் பழையபடியும் மௌனியானுர். வண்டி திருச்சியில் வந்து நின்றது. அந்தப் பெண் முதலில் கீழே இறங்கினுள். உள்ளே இருந்து ஒவ்வொரு பெட்டியாக எடுத்துக்கொடுத்தான் வாலிபன். அப்போது அந்தப் பெண், "சூடாமணி! குடையை மறந்துவிடாதீர்கள்!" என்று சத்தம் போட்டாள். தலைகுனிந்து ஏதோ படித்துக்கொண்டிருந்த தேசானந்தர், 'சூடாமணி' என்ற வார்த்தையைக் கேட்டதும் தலை நிமிர்ந்தார். அதற்குள் அந்த வாலிபன் கீழே இறங்கிவிட்டான். அவனைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொள்ள வேண்டும் போல் தோன்றிற்று தேசானந்தருக்கு. அவனைக் கூப்பிட வாயெடுத்தார். தொண்டை அடைத்தது. அவனும் அந்தப் பெண்ணும் சென்றுவிட்டார்கள்.

வண்டியைவிட்டு இறங்கி அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார் தேசானந்தர். கீழ்ப் படிக்கட்டுகளில் இறங்கி அவர்கள் சென்றுவிட்டார்கள். உடனே தேசானந்தர் வண்டியிலிருந்த தன் பெட்டியைக் கீழே இறக்கி வைத்து. ஒரு 'போர்ட்டரைத்' தூக்கிக்கொள்ளச் சொல்லி, அவர்களைப் பின்தொடர்ந்தார். படிக்கட்டுகளில் இறங்கப் போகும் சமயம், அருகிலே ஒரு பெண் நின்றுகொண்டிருப்பதைக் கண்டார் தேசானந்தர். அவளையே கூர்ந்து கவனித்தார், அவர். ரயிலில் சந்தித்த சீதாவைப் போலவே தோற்றமளித்தாள் அவள். தேசானந்தர் அவளோடு பேச வாயெடுத்தார். அதற்குள் இட்டிலிப் பொட்டலத்தோடு ஒரு ஆடவன் அந்தப் பெண்ணிடம் வந்து, 'வாம்மா' என்ருன். தேசானந்தரின் பிரமை நீங்கிற்று. கீழே இறங்கிப் படபடவென்று நடந்தார். வெளியில் வந்து பார்த்தார். அவர் தேடிய இருவரையும் காணும். அதற்குள் அவர்கள் போய்விட்டார்கள். தேசானந்தரின் கண்கள் துருவித் துருவி ஆராய்ந்தும் அவர்கள் காணப்படவில்லை.

தேசானந்தர் ஒரு குதிரை வண்டியை அமர்த்திக்கொண்டு நேரே ஒரு ஓட்டலுக்குச் சென்ருர். திருச்சி நகரம் முழுவதிலும் சுற்றியாவது சூடாமணியைக் கண்டுபிடித்து விடுவது என்று முடிவு கட்டிக்கொண்டார். ஆனுல் ஆச்சரியப்படத் தக்க விதத்தில் அவர் எடுத்துக் கொண்ட அறைக்கு அடுத்த அறையிலேயே சூடாமணியும் அந்தப் பெண்ணும் தங்கியிருந்தார்கள். எடுத்த எடுப்பிலேயே தன் முயற்சி வெற்றி தருவதை உணர்ந்து பூரித்தார் தேசானந்தர். சிறிதும் தாமதியாது அடுத்த அறையின் கதவைத் தட்டினுர். போனதும் போகாததுமாகக் காதல் புரிய ஆரம்பித்த அவர்கள் எழுந்துவந்து கதவைத் திறந்தார்கள். தேசானந்தர் ஆத்திரமாக உள்ளே நுழைந்தார். "சீதா என்ற பெண்ணைத் தெரியுமா உனக்கு?" என்று கேட்டார். சூடாமணி திகைத்தான். அந்தப் பெண் விழித்தாள். "ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்டான் அவன்.

"காரணமாகத்தான்! அந்தப் பெண்ணைக் கற்பழித்து நீ கைவிட்டுவிட்டாய்! உன்னைப் போலிசில் ஒப்படைக்கப் போகிறேன்" என்று மிரட்டினுர் தேசானந்தர்.

சூடாமணி உண்மையிலேயே பயந்துவிட்டான். தேசானந்தரைத் தனியாக அழைத்துக் கொண்டு அவருடைய அறைக்கு வந்தான். அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினுன். அவன்கூட வந்திருந்த பெண் ஒரு நாடகக்காரிதானும். சீதா கண்டுபிடிக்கப் பட்டால், அவளை மீண்டும் வைத்துக் கொள்வதாக உறுதி கூறினுன். அந்த உறுதியைப் பெற்றுக் கொண்டு வெளியில் வந்த தேசானந்தர் ஆச்சரியமான ஒரு காட்சியைக் கண்டார். அங்கே அளவுகடந்த அலங்காரங்களோடு சீதா வந்துகொண்டிருந்தாள். அவள் அருகிலே ஒரு மைனரும் வந்துகொண்டிருந்தான்.

தொடரும்

நல்லியக் கோடன்...

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

அதுமட்டுமா! பீடார் உறந்தை... பொன்னி பெருகிவரும் சென்னி வளவன் திருநாடு...சோழப் பெருநாடு......நந்நீர்ப் பொய்கையில் மலர்ந்த செந்தாமரையை, பள்ளியாகக் கொண்டு, துயில்கின்ற வண்டு, காலை மலர்ந்ததும் சீகாமரம் என்னும் பண் பாடுகின்ற நிலச்செழிப்புற்ற நன்னாடு...அதுவும் வறியதுதான், கிடங்கலோடு ஒப்பிட்டால்!

ஏன், கயலோட நீர்மூழ்கி, கழுநீர் மலர் தின்று, கரையேறிய எருமை, மிளகுக்கொடி படர்ந்த பலாமரத்து நிழலில், மல்லிகை மலர்களைப் படுக்கையாக்கி உறங்கும் செல்வச் செழிப்புற்ற சேர நாடும் தோற்கும், கிடங்கலை எதிர் வைத்து நோக்கினால்!

என்ன இது! மூவர் சிறப்பினும் மூத்த சிறப்பு, குறுநில மன்னன் தலைநகருக்கு ஏது என்கிறாயா? பாண! ஏன், அப்படி ஆச்சரியமாகக் கண்களை அகல விழித்துப் பார்க்கிறாய்? நீ, நல்லியக்கோடனைக் கண்டதில்லை; கண்டிருந்தால் வியப்புக்குறி உன் முகத்தில் படர்ந்திருக்காது! பாணருக்கு, "ஈந்து சிவந்த" இரு கரம் படைத்த அந்த இன்முக வள்ளலுக்குமுன் கடை எழு வள்ளல்கள் எம்மாத்திரம்?

குளிர் அருவி ஒளிபடக் குதிக்கும் பறம்பின் கோமான் **பாரியும்**, வேற்படையும் வீரக்கழலும் பொருந்தி, நாடும் குதிரையும் இரவலர்க்கு ஈந்து நற்புகழ்கொண்ட **காரியும்**, ஆர்வ நன்மொழி **ஆயும்**, துல்லிய தமிழில் நல்லிசை எழுப்பிய தமிழ் மூதாட்டிக்கு நெல்லிக்கனி தந்த அதிகனும், உள்ளக் கருத்தை ஒளியா துரைத்து, நண்பர்கள் இல்லம் நடத்தப் பல்பொருள் நல்கிய **நள்ளியும்**, கூவிய மயில் குளிர் தாங்காது கூவிற்றோ என எண்ணி, ஓவியம் வரைந்த போர்வையைத் தூக்கி மயிலுக்களித்த **பேகனும்**, கூத்தாடுவார்க்கு நாடு தந்த **ஓரியும்**......பாண! இவ்வெழு வள்ளல்களின் செவ்விய கொடையையும் இன்று தன்னந்தனியனாய்த் தானே கொடுக்கும் மாபெரும் வள்ளல் நல்லியக்கோடன்.

அவன் அறிஞன். வறிஞர் நெஞ்சின் வாட்டம் கண்டு வாடும் நெஞ்சினன். மார்பிலே வேல்பட்ட தழும்பும், முகத்திலே வாள்பட்ட தழும்பும், கண்டால், அவன் போர் தொட்ட வேளையிலும் புறந்தராது வந்தவன் என்பதை உணரலாம். ஓவியர் குலத்தினன்; உத்தமன்; யானையை உதைத்து உதைத்து ஓட்டுவதாலே பாதத்தில் தழும்பு பெற்றவன். வாடும் பாணருக்கும், ஆடும் கூத்தருக்கும் வாரி வழங்கும் மேகம் அவன்!

பாண! புலவன் அதிகமாகப் புளுகுகிறானே என எண்ணுகிறாயா? இல்லை. போனேன்; கண்டேன்; பெற்றேன்—ஆதலின் கண்டதைச் சொன்னேன். நீயும் அங்கே போ. சுற்றத்தாரையும் அழைத்துப் போ. அடையா நெடுங்கதவும், அஞ்சல் என்ற சொல்லும் உடையான் நல்லியக்கோடன்."

—கூறி முடித்தான் வந்த பாணன். பொன்னியண்ணன் கண்கள் இதழ் விரித்தன. ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும் கார் தட்டிய பஞ்ச காலத்திலும், யார் தட்டினும் தட்டுவாராமல், ஈகைக்கு மார் தட்டும் வள்ளல்களும் இல்லாமலில்லை என எண்ணி எண்ணி மகிழ்ந்தான். வாழ்விலே பாதிப்பங்குபெற வந்து வறுமையில் பாதிபெற்ற மனையாளை நோக்கினான். பாதை தெரிந்துவிட்டதாலே புது ஒளிபெற்ற அவளது கண்கள், பாதத்தை நோக்கிக்கொண்டிருந்தன. புன்னகையோடு திரும்பினான்பொன்னியண்ணன்.

"எவ் வழிப் போகவேண்டும், கிடங்கலுக்கு? போய், என்ன செய்யவேண்டும்?" என்று ஆவலோடு கேட்டான்.

பாணன் அமைதியாகப் பதிலிறுத்தான்.

"பாண! இவ்வழியே புறப்பட்டால் முதன் முதலில் நெய்தல் நிலத்தினை அடைவாய். அகன்று விரிந்த ஆழியின் அலைகள், அழகுற வந்து கரையினில் மோதும் இனிய காட்சியை அங்கே கண்பாய். அங்கே, பால்போலும் மணற்பரப்பில் **தாழம்**பூக்கள் பரவிக்கிடக்கும். பத்தரை மாற்றுப் பசும்பொன் போல, சித்திரம் போடும் **செருந்தியின்** மலர்கள். நீலமணி விளக்கேந்தி, கோலம் பெற்றிலங்கும் **கழிமுள்ளிச்** செடி. இலையுதிரப் பூப்பூத்து, "மரமெல்லாம் மலரோ" என ஐயுறத் தக்கவகையில் முத்துக்கள் கொண்டிலங்கும் புன்னைமரம். ஆம்; பாண! நெய்தல் நிலத்தின் சீரிய சிறப்புக்கள் அனைத்தும் கொண்ட அங்கே **எயிற்பட்டினம்** எனும் ஓர் நகர் உள்ளது. அந்நகர் புகுந்தால்,பரதவர் குலத்துப் பாவையர் சிலரைக் காண்பாய். ஒரே ஆடையால் உடலம் போர்த்தி, உள்ளத்தின் வெண்பாங்கு முகத்தில் தோன்றவரும் அம்மடவார், நீலக்கடல் ஒதுக்கிய அகிற்கட்டைகளைக் கொண்டு, தீமூட்டி, அதிலே, காய்ந்த குழல் மீன்களைச் சுட்டு, விருந்து படைப்பர். பரதவர் கள்ளூற்றித் தருவர்.

அதுவும் கடந்து அடுத்த நிலம் செல்வாய். அதுதான் முல்லை நிலம்! அங்கேதான் **வேலூர்** என்னும் வீரநகரம் உள்ளது. அந்நகரத்து எயினர் குடியினர் ஆமான் புலாலோடு அறுசுவை விருந்து படைப்பர்.

அதனையும் கடந்து அப்பால் சென்றால், மருத நிலத்தினை அடைவாய். அங்கே உள்ளதுதான் **ஆமூர்** நகரம். போமூர் அறியாமற் போய்த் திரும்புவார்க்கு ஆமூர் நகரம் அன்பே வடிவாய்க் காட்சிதரும். அந்நகர் உழவர் அன்புறுங்குணத்தர். காளைபூட்டி நிலத்தை உழுவர்; அதுபோல் அன்பைப் பூட்டி மனத்தை உழுவர். அவர்கள் நண்டுகளை அறுத்துப் போட்டு பீர்க்கங்காய்களை வகிர்ந்து போட்டுக் குழம்பு வைத்து, மல்லிகைப் பூப்போன்ற சோற்றோடு கலந்து தருவர்.

இத்தனை இதயங்களையும் கடந்து சென்றால், இவற்றுக்கு முடிவைத்தது போன்ற, கிடங்கல் நகரை அடைவாய். அங்கே வான்மோதும் மாடத்தைக் காண்பாய். அதுதான் நல்லியக்கோடன் அரண்மனை. அல்லும் பகலும் திறந்துகிடக்கும் அந்த அரண்மனையினுள்ளே செல்வாய். கோடனைக் காண்பாய். செம்பாலைப் பண்ணிசைப்பாய். கோடன், பல்பொருளும் பரிசாகத் தருவான்! பாண! விரைதி! விரைதி!"

—பொன்னியண்ணன் முகம் பூத்துக் குலுங்கிற்று. பாணனைக் கட்டித் தழுவி, மனைவியோடும் விடைபெற்றான்.

★

கிடங்கல் நகரம் நகைபூட்டிய பருவமங்கை போற் காட்சியளித்தது. தெருக்கள் பரபரப்பாக இருந்தன. தெருக்களின் இருமருங்கிலும் முத்துவாணிபம், ரத்தின வாணிபம், என அத்தனை வாணிபமும் நடந்துகொண்டிருக்கக் கண்டான், பொன்னியண்ணன். நிண வாணிபத்துக்கும் மீன் வாணிபத்துக்கும்கூடக் குறைச்சலில்லை. அடிக்கடி தன் மனையாளைப் பார்த்து, மனங்களித்தான்.

கிடங்கல் நகரத்தின் கெண்டை விழியார் அனைவரையும் ஒன்று சேர்த்துப் பார்த்தாலும், பாணன் மனைவி பூந்தாதுக்கு ஈடுகாண முடியாது. பருவப் பொலிவேறிய பச்சைப் பசுங்கனி அவள். வயதேற ஏற மெருகேறும் பெண்களில் அவளும் ஒருத்தி. வறுமைகூட அவள் அழகுக்கு மெருகுதான் போட்டிருந்தது. தெருவிலே அவர்கள் நடந்து சென்றபோது, வைத்த கண் வாங்காது மாதர்கள் அவளைப் பார்த்தனர். தங்கள் கணவன்மார் அவளைக் கண்டுவிடக்கூடாதே என அஞ்சிய பெண்டிரும் உண்டு. இந்த அழகை ஈடுகட்டிப் பார்த்தால் தங்கள் அழகு மங்கித் தெரியுமே எனச் சஞ்சலப்பட்டார்கள் அவர்கள்.

பொன்னியண்ணனும் பூந்தாதும் பல தெருக்களைக் கடந்தனர். கதிர், படிபோட்டு மேற்றிசையில் இறங்கிற்று. கூத்தாட்டரங்கங்கள் களைகட்டத் தொடங்கின. குடும்பங் குடும்பமாக அங்கே கூட்டம் குவியலாயிற்று. மார்பளவு கச்சு, மன அளவைக் காட்ட, காதளவு கண்கள் கலையளவை நாட்ட, சலங்கை கட்டிய மாதரார் இலங்கு நாடகம் ஆடினர். யாழும் மத்தளமும் கூடி இசைத்தன. விளக்குகள் ஆடரங்கத்தை அழகுபடுத்தின. பொன்னியண்ணனும் பூந்தாதும் நின்று, அந்த இன்ப நாடகம் கண்டனர். ஆடரங்கத்திற்குச் சிறிது தூரத்தில் சிற்றுணுக் கடைகள் அமைந்திருந்தன. அவற்றைப் பார்த்ததும் பொன்னியண்ணனுக்குப் பசி தோன்ற ஆரம்பித்தது. அந்தக் கடைகளையே கூர்ந்து நோக்கினான். அதைக் கண்ட பூந்தாதுவின் கண்கள் நீரலை பெய்தன.

இந்தக் காட்சியைக் கண்டான், அருகிலே நின்ற ஒருவன். ஓடினான். பச்சைவாழை இலையில் சில பண்டங்களைக் கொண்டுவந்தான்; பாணன்முன் நீட்டினான். பாணன் மனங்கனிந்து அதனைப் பெற்றுக் கொண்டான். "வாழி!" என வாழ்த்தினான்; அவன் வணங்கிப் போனான். கிடங்கல் நகரம் முழுவதுமே அன்பின் வடிவமா?—அவன் மனம் பாடிப்பாடிப் பரவசப்பட்டது.

கூத்து முடியும் தருணம்; மேகங்கள் கூடின; மின்னல் சிதறிற்று; இடி முழங்கிற்று; நல்லியக்கோடன் உள்ளம்போல், மழை பொலபொலவெனப் பெய்யஆரம்பித்தது. கூத்தாட்டவைக்குழாம் சிதறி ஓடிற்று. குழவிகளை அணைத்து அன்னையரும், இருவரையும் அணைத்துமணவாளரும் பறந்தனர். வரவறியான் செலவிலே மறையும் செல்வம்போல் கூட்டம் முழுவதும் மறைந்தது. பொன்னியண்ணனும் பூந்தாதும் திசை தெரியாது ஓடினர். எங்கே போவது? தங்குமிடம் ஏது?—கால்கள் ஓடின. உள்ளங்கள் குழம்பின. எதிரே வேகமாக வந்துகொண்டிருந்தது இரு குதிரை பூட்டிய ரதம். வாட்டிய வறுமையால் வாடிய மேனி தள்ளாட அதன் எதிரே ஓடினான் பொன்னியண்ணன். கடும் மழையிலும் ரதம் வருவதைக் கண்டுகொண்ட பூந்தாது 'ஐயோ' என அலறினாள். இமைக்குமுன் ரதம் பொன்னியண்ணனைக் கீழே தள்ளிவிட்டது. சிறிது தூரம் போய் நின்றது.

கீழே விழுந்த பொன்னியண்ணன் துடித்தவாறு கண்களைத் திறந்தான். பளீர் என வீசிற்று ஒரு மின்னல். பொன்னியண்ணன் கண்களுக்கு அந்த மின்னலை எதிர்க்கும் சக்தியில்லை. அவை ஒளி இழந்தன. அலறித் துடித்தபடி அவனருகே வந்தாள் பூந்தாது. அதற்குள் ரதத்திலிருந்து இறங்கிய இருவர் பொன்னியண்ணனைத் தூக்கி ரதத்தில் வைத்தனர். பூந்தாதுவையும் ரதத்தில் ஏற்றிக் கொண்டனர். ரதம் பறந்தது.

நேரே நல்லியக்கோடன் மாளிகையிலே வந்து நின்றது ரதம். காவலர்கள் சிலர் ஓடிவந்தனர். ரதத்தில் வந்த இருவரும் பொன்னியண்ணனைத் தூக்கி உள்ளே கொண்டுவரும்படி காவலர்களுக்கு ஆணையிட்டனர். பொன்னியண்ணன் உள்ளே தூக்கிச் செல்லப்பட்டான். அழுது துடித்த பூந்தாதுவும் பின்னாலேயே சென்றாள்.

பொன்னியண்ணனை ஒருகட்டிலில் கிடத்தினார்கள். கண்களைக் கசக்கிக்கொண்டே இருந்தானவன். "கண் தெரியவில்லையே கண் தெரியவில்லையே" என்று கதறினான். பூந்தாது அவனருகிலே அமர்ந்து அவன் கண்களைத் திறந்து திறந்து பார்த்தாள். அரண்மனை மருத்துவர் அழைக்கப்பட்டார். பொன்னியண்ணன் கண்கள் சோதிக்கப்பட்டன. இறுதியில் மருத்துவர் சொன்ன வார்த்தை பூந்தாதுவின் தலையில் இடியாக விழுந்தது.

பொன்னியண்ணன் கண்கள் காட்சிச் சக்தியை இழந்துவிட்டனவாம்! "அத்தான்! அத்தான்!" என்று அழுதாள் பூந்தாது. தன் அழகைப் பார்த்து ரசித்த கண்கள்,

அஞ்சல் மூலம் கல்விப் பயிற்சி

1. 1956, அக்டோபர் S. S. L. C.

2. 1956, செப்டம்பர் இண்டர்மீடியட் (சென்னை)

தேர்வு எழுதும் மாணவர்கட்குத் தபால் மூலம் சிறந்த முறையில் பாடங்கள் அனுப்பிப் பயிற்சி தரப்படும்.

குறைந்த கட்டணம்! வகுப்புகள் தொடங்கிவிட்டன!

வெற்றிக்கு உறுதி !! இன்றே சேருங்கள் !!

உடனே 2 ஒரு அணு ஸ்டாம்புகளுடன் விண்ணப்பியுங்கள்.

ஏ. ராதாகிருஷ்ணன், நிருவாகி,
அஞ்சல் முறைக் கல்விப் பயிற்சிக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 2.

இனித் தன்னைப் பார்க்கவே முடியாதபடி அழிந்துபோனதை எண்ண எண்ண, அவள் உள்ளம் தீப்பட்ட புழுவாய்த் துடித்தது. காய்ந்த பனையோலையில் பற்றிய நெருப்புப்போல அவள் மேனி கொதித்தது. அவள் கைகளைப் பற்றியபடி கதறினான் பொன்னியண்ணன். அதனிடையில் ஒரு குரல், அன்பு கலந்த அலை எழுப்பிற்று. "என்ன இது? யார் இவர்கள்?"

ஒருவன் சொன்னான். "தெருவிலே ரதம் மோதி விழுந்துவிட்டார்கள். தூக்கி வந்தோம். கண்கள் போய்விட்டனவாம்!"

"ஆ!-அந்தக் குரல் கவலையோடு எழுந்தது. பூந்தாது சற்று ஒதுங்கி நின்றாள். குரல் எழுப்பிய நல்லியக்கோடன் பொன்னியண்ணன் அருகிலே அமர்ந்து பரிவோடு, "ஐயா, யார் நீங்கள்?"-என்று கேட்டான்.

பொன்னியண்ணன் தன் கதையைச் சுருக்கமாகச் சொன்னான். சொல்லிவிட்டு, "ஐயா, நான் எங்கே இருக்கிறேன்? நல்லியக்கோடனை எப்பொழுது பார்க்கலாம்? அந்த வள்ளலின் முகத்தை நான் பார்க்கமுடியுமா? என் கண்கள் மீண்டும் ஒளி பெறுமா? அந்த உத்தமனை ஒருமுறை பார்த்த பிறகாவது இந்தக் கண்கள் ஒளி இழந்து போகட்டுமே!"-என்றான்.

நல்லியக்கோடன் கண்களிலே நீர் ததும்பிற்று. ததும்பிய நீர் தாரை தாரையாக வடிந்தது. பொன்னியண்ணன் கைகளிலே அது விழுந்தது.

"ஐயா, ஏன் அழுகிறீர்கள்? நீங்கள் யார்? நீங்கள் யார்?"-என்று பதறினான்.

நல்லியக்கோடன் கம்மிய குரலில் "நான்தான் நல்லியக்கோடன்"-என்றான்.

பொன்னியண்ணன் தாவி எழுந்து அவனைக் கட்டிக்கொண்டு, "நல்லியக்கோடன்! நல்லியக்கோடன்! வள்ளலே! உன் முகத்தைப் பார்க்கமுடியவில்லையே! வாழ்க்கையின் மகத்தான இன்பத்தை இழந்துவிட்டேனே. இதுவரை என் உயிர் துடித்துக்கொண்டிருந்ததெல்லாம் உன் இனிய முகத்தைக் காணத்தானே! ஐயோ! நல்லியக்கோடா!" - என்றவாறு அவன் மேனி முழுவதையும் தடவிப்பார்த்தான் பொன்னியண்ணன்.

நல்லியக்கோடன் அவனைக் கையமர்த்தி, "பாணரே, அமைதி கொள்ளுங்கள்! நீங்கள் கண்களைத் திரும்பப் பெறுவதற்கு என்னாலான அனைத்தையும் செய்வேன். அமைதி பெறுங்கள்!" என்றான்.

பாணன் அமைதியாகச் சாய்ந்தான். நல்லியக்கோடன் மெதுவாக எழுந்து வேறுபுறம் சென்றான்.

பூந்தாது கணவனருகில் வந்து அமர்ந்தாள். சிறிய யாழொன்றைக் கொண்டு வந்து, ஒருவன் பொன்னியண்ணனிடம் கொடுத்தான். யாழை மீட்டி அவன் மெதுவாகப் பாட ஆரம்பித்தான். பூந்தாதுவும் சேர்ந்து பாடினாள்.

பொழுது விடிந்தது.

நல்லியக்கோடன் அரண்மனை சுறுசுறுப்பாக இயங்கிற்று. கவியரங்கம் அழகுற விளங்கிற்று. பொன்னியண்ணனைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு பூந்தாது கவியரங்கத்திற்குள் நுழைந்தாள். கோடனுக்கு எதிரே இருந்த ஆசனத்தில் பொன்னியண்ணன் அமர்த்தப்பட்டான். யாழை மீட்டிப் பாடினான். "அஞ்சுவது அஞ்சி உலகு புரக்கும் வள்ளலே, அறிஞர் அவையில் சிரம் தாழ்த்தி, பகைவர் முன்னே நிமிர்ந்து நின்று, வருபவர்க்கு வாரி வழங்கி, தினையளவு ஒழுக்கங்கூடக் கெடாது வாழும் உத்தமனே! குடிபடைகள் துயர் நீக்கும் குணவானே!" என நல்லியக்கோடனை வெகுவாகப் புகழ்ந்தான். அவன் பாடி முடித்ததும் ஆயிரம் பொன் கொண்ட பொற்கிழி யொன்றைப் பரிசாக வழங்கினான் நல்லியக்கோடன். வழங்கிவிட்டுப் பூந்தாதுவைப் பார்த்தான்.

"அம்மா, இரவு உன் இனிய குரலைக் கேட்டேன். இப்பொழுதும் பாடமாட்டா? என்றான்.

பூந்தாது கணவனருகில் அமர்ந்து பாட ஆரம்பித்தாள். பாணன் யாழ் மீட்டினான். அவை மெய்மறந்தது. பாடி முடித்ததும், இரண்டாயிரம் பொன் கொண்ட இரண்டு பொற்கிழிகளை அவளுக்குப் பரிசாக அளித்தான் நல்லியக்கோடன். நன்றியோடு பெற்றுக்கொண்டாள் அவள். இருவரும் தங்கள் அறையில் கொண்டுவிடப்பட்டனர்.

அந்த அறையின் பக்கமாகப் போன ஒரு குறும்பன் இன்னொருவனிடம் சொன்னான்: "ஆண் பாடினால் ஆயிரம்; பெண் பாடினால் இரண்டாயிரம்! அதற்குத்தானப்பா மரியாதை!"

அவன் சிரித்தான். பொன்னியண்ணன் திகைத்தான்.

"பூந்தாது, எவ்வளவு கொடுத்தார் உனக்கு?"

பூந்தாது சொன்னாள்: "இரண்டாயிரம்!"

"இரண்டாயிரம்! இரண்டாயிரம்!!"-அவன் உள்ளம் பேதலித்தது. துல்லியமான அவன் நினைவிலே களங்கப்புள்ளி விழுந்தது. பூந்தாது அன்று முழுவதும் உற்சாகமாகப் பாடிக்கொண்டிருந்தாள். பொன்னியண்ணன் அதைக் கவனிக்காமலில்லை. சந்தேகம் கொண்ட உள்ளத்திற்குத் தன் நிழலும் பகைவன்தான்.

பொழுது சாய்ந்தது.

அறுசுவை உணவு உண்டு அமைதியாகத் தூங்க ஆரம்பித்தான் பொன்னியண்ணன். அவனருகிலேயே துயில் கொண்டாள் பூந்தாது.

அதிகாலை!

பொன்னியண்ணன் வலது கை, அருகில் துயின்ற மனைவியைத் தழுவத் தாவிற்று. ஆனால் அவள் அங்கே இல்லை. அவன் திடுக்கிட்டான். "பூந்தாது! பூந்தாது!" என்று கூவினான். சத்தம் கேட்டுக் காவலர்கள் ஓடிவந்தனர். "என்ன? என்ன?" என்றனர்.

"ஒன்றுமில்லை" என்று மென்று விழுங்கினான் பொன்னியண்ணன். அவர்களிடம் சொல்ல அவனுக்கு வெட்கம். சந்தேகத்தை உண்மையாக்கிக்கொண்டது களங்கப்பட்ட மனது.

சிறிதுநேரத்தில் பூந்தாது வந்தாள். அவள் கையிலே மூலிகை இருந்தது. ஆனால் அதைக் காண, பாணனுக்குக் கண்களில்லை.

"பூந்தாது!" என்று உறுமினான்.

"அத்தான்!"

"எங்கே போனாய்?"

"மூலிகை பறிக்க!"

"எப்போது போனாய்?"

"அதிகாலையில்!"

"நான் நம்பமாட்டேன்!"

"ஏன் அத்தான்?"

............அவன் பதில் சொல்லவில்லை. குப்புறக் கவிழ்ந்து குமுறிக் குமுறி அழுதான். அதன் பொருள் அவளுக்குத் தெரியாது.

கண்களை இழந்த கவலை என்று கணவனின் கண்களைத் தடவிக் கொடுத்தாள். அழைப்பு வந்தது மீண்டும்!

பொன்னியண்ணனும் பூந்தாதுவும் கவியரங்கிற்கு இட்டுச் செல்லப்பட்டனர்.

"முதலில் பூந்தாது பாடட்டும்" என்றான் நல்லியக்கோடன்.

பொன்னியண்ணன் இதயத்தில் சுருக்கென்று தைத்தது.

பூந்தாது பாடினாள். பொன்னியண்ணன் யாழ்மீட்டினான். யாழிலே அவல ஓசை எழுந்தது. நல்லியக்கோடன் கவனித்தான். ஆனால் அவல ஓசையின் கருப்பொருள் அவனுக்குத் தெரியாது.

பூந்தாதுவின் இனிய குரல் அவல ஓசையை அமுக்கிற்று. தனைமறந்த நல்லியக்கோடன் பொற்கிழியைத் தூக்கியவாறு பூந்தாதுவின் அருகில் வந்தான்.

"இரவு பாடிய இசையில் இதைவிட உணர்ச்சியிருந்தது. என்றாலும் இந்த இசையும் இன்னிசைதான்" என்று சொன்னபடியே பொற்கிழியை அவள் கையில் வைத்தான்.

"இரவு பாடிய இன்னிசை! இரவு! இரவு!!" - பொன்னியண்ணன் துடித்தான்.

"பாணரே! நீங்கள் பாடுங்கள்!"-நல்லியக்கோடன் சொல்லிவிட்டு அமர்ந்தான்.

பாணன் பாட ஆரம்பித்தான்.

"கொடை கொடுக்கும்
கையானே! கோட மன்னா!
குமுறுகின்ற நெஞ்சத்தை
அறிவாயா நீ!"

—எடுப்பிலேயே மேல்காலம். நல்லியக்கோடன் திகைத்தான். ஆச்சரியத்தோடு அருகிலிருந்தவர்களைப் பார்த்தான்.

சுருதியை மீண்டும் ஏற்றிக்கொண்டு, தொடர்ந்தான் பொன்னியண்ணன்.

"கடை திறந்தாய், கொடை வழங்க!
கருணை நெஞ்சின்
கதவுகளைத் திறந்தாயென்
றெண்ணி வந்தேன்!"

—எண்ணி வந்ததில் என்ன தவறு? கோடன் குழம்பினான்.

"படை நடுங்கப் போர்புரியும்
வீர மன்னா!
பாணனை ஏன் கலங்கவைத்தாய்..."

—நல்லியக்கோடன் இருக்கை விட்டெழுந்தான்.

"......................அருகில் வந்த
தொழுவனைக் கைதனை
நினைந்தோ கடைதிறந்தாய்!
தூயதமிழ்த் தன்மானம்
ஏன் மறந்தாய்!
ஏன் மறந்தாய்! ஏன் மறந்தாய்!

—பாணன் உச்சக்குரலில் கதறினான்.

"பாணா!" என்று அலறினான் கோடன்.

"அத்தான்!" என்றாள் பூந்தாது, யாழின் நரம்பு அறுந்தது.

இடுகாட்டு அமைதி.

பாணன் கண்கள் அருவியாயின.

பதறி நின்றாள் பூந்தாது.

பாணன் அருகிலே வந்தான் நல்லியக்கோடன்.

"பாணா!" அவன் குரல் கடுமையாக ஒலித்தது. முதன் முதலில் அந்தக் குரலை அரண்மனையே இப்போதுதான் கேட்டது.

"என்ன நினைந்து பாடினாய்! நல்லியன் புகழுக்குக் களங்கம் விளைக்கும் சொல்லை எழுப்ப எப்படித் துணிந்தாய்?"

- பாணன் அமைதியாகச் சிரித்தான்.

"இரவு பாடிய இசையில் இதைவிட உணர்ச்சியிருந்தது......" என்றான், அலட்சியமாக.

செவிகளை மூடிக்கொண்டான், நல்லியக்கோடன்.

"அத்தான்!" என்று மீண்டும் அலறினாள், பூந்தாது.

"பாணா! படுபாவி! சொல்லின் பொருளறியாத் துட்டனே! இரவு பாடிய இன்னிசை, நீ இழந்தவிழிகளுக்கு ஆறுதல் தர எழுந்த இன்னிசை......அட பரிதாபத்துக்குரியவனே! விழியிழந்தபோதே அறிவிழந்துவிட்டாயா!......"

"நல்லியக்கோடா!" - பாணன் அலறினான்.

"உன் உள்ளம் களங்கமற்றது என்றால், எனக்கு ஆயிரம் தந்த நீ, இவளுக்கு இரண்டாயிரம் தருவானேன்!" - நேரடிக் கேள்வி தொடுத்தான்.

நல்லியன் கண்கள், தாளாது மூடித் திறந்தன. கண்ணீர் பெருகிற்று. பாணன் தோளில் கை வைத்துப் பதிலிறுத்தான்.

"தந்தையைக் காட்டிலும் தாயிடத்திலே அதிக அன்பு செலுத்துகிறோமே, ஏன்?"

—பாணன் திகையுண்டான்.

அருகில் வந்தாள் பூந்தாது. சொன்னாள்.

"அத்தான்! இரவு முழுவதும் உங்கள் அருகில் அமைதி இழந்து அமர்ந்திருந்தேன். உங்கள் விழிகளைக் காணப் பொறுது பாடினேன்......"

"சோகம் கலந்த அந்த இசையை மாடத்திலிருந்து நான் கேட்டேன். எனக்கல்ல...தூய என் தாய்க்குக் களங்கம் கற்பித்தாயே கொடியவனே! என்னைப் பார்! முடியாது உன்னால்! என் பெயருக்குக் களங்கம் விளைவிப்பதற்காகவே நீ பார்வையை இழந்திருக்கிறாய்! இடங்கல் நகரத்தில் ஆடு மாடுகள் கூட முறைதவறி நடப்பதில்லையடா, பாணா! உனக்கு யாழெதற்கு இனி!......"-என்ற கோடன், பாணன் கையிலிருந்த யாழை முறித்துத் தூக்கி எறிந்தான். காவலன் இடையிலிருந்த வாளை உருவி, பிடியை அவன்முன் நீட்டினான்.

"பிடி! என்னைக் கொன்றுவிடு. நாற்பது ஆண்டுகள் நடந்த பெரும் புகழை, ஒரு நொடியில் அழித்தாயே! என் தாயின் பெருமையைக் குலைத்தாயே! என் உயிர் இனி எதற்கு! பாணா! கொன்றுவிடு என்னை! கொன்றுவிடு என்னை!"-கோடன் உரைத்த மொழி அரண்மனை எங்கும் எதிரொலித்தது.

பாணன் உடல் நடுங்கிற்று.

பூந்தாது துடித்தாள். இனித் தானிருந்தாலும், பாணன் பூசிய மாசு, உறுத்துமே மனத்தை! பாணனது பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஏற்றிக்கொண்டாள். பாணனால் அதை உணர முடிந்தது.

பூந்தாது ஓடினாள்! குருடனான பாணன் அதை அறிந்தான்.

"பூந்தாது! பூந்தாது! என்று கூவினான் அவள் நிற்கவில்லை.

"அம்மா!" என்று அலறினான் நல்லியக்கோடன்.

அவள் அப்படியே நின்றாள்.

"அம்மா!...அம்மா!...அம்மா!"-என்ன சக்தி, அந்த வார்த்தைக்கு.

அவள் மெதுவாகத் திரும்பினாள்.

பாணன், தடாலென, நல்லியக்கோடனின் கால்களில் விழுந்தான்.

கால்களைக் கண்ணீரால் கழுவினான்.

அந்தக் கண்ணீர், களங்கத்தையும் கழுவிக்கொண்டு ஓடிற்று.

['சிறுபாணாற்றுப்படை' யைத் தழுவிய கற்பனை.]

தென்னரசு ஜூலை நிகழ்ச்சிகள்

ஜூலை 15—திருப்பத்தூர்
ஜூலை 22—போளூர்
ஜூலை 29—திருக்கோயிலூர்-கீழையூர்

மேகங்கள்...

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

“தற்கொலை! — கையாலாகாதவர்களின் கண்மூடி வேலையல்லவா அது!”

“வதைபடுகிறோமே புருக்களே; இதைக் கவனிக்கவேண்டாமா நீங்கள்?”

இரண்டு புருக்களுமே சிரித்துவிட்டன. ஆண்புரு கேட்டது.

“மேகங்களே! இன்பம் என்பது என்ன என்று தெரியுமா உங்களுக்கு?”

“எப்போதாவது இன்பத்தை அநுபவித்திருந்தாலல்லவா தெரியும் இப்போது சொல்வதற்கு!”

சிரிப்பு வெடித்துச் சிதறியது. ஆண் புருவிடமிருந்து பேசியது.

“மேகங்களே! இன்பத்தையே உணராதவர்களுக்குத் தாங்கள் அநுபவிப்பது துன்பம் என்பது எப்படித் தெரியும்? பிறவிக் குருடனுக்கு இரவு ஏது? உண்மை இதுதான். இன்பத்திலேயே புரள்பவர்கள் இருக்கிருர்கள் சிலர். துன்பத்தைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்டிருப்பார்கள், அல்லது படித்திருப்பார்கள். எங்கே அந்தத் துன்பம் தங்களைப் பிடித்துக் கொள்ளுமோ என்று எப்போதும் பயம் அவர்களுக்கு. அந்தப் பயத்தால் தம்மிடம் வந்து சேருகிற இன்பத்தையெல்லாம் கண்டு ‘துன்பம்! துன்பம்!’ என்று துள்ளிக் கூக்குரலிடுவார்கள் அவர்கள்!”

“அவர்களல்ல நாங்கள்-புருக்களே! அறியாமல் பேசாதீர்.”

“என்னதான் நீங்கள் சொல்லுகிறீர்கள்?”

“இங்கே இந்த வாழ்க்கை எங்களுக்குப் பிடிக்கவில்லை.”

“புரிந்துகொள்ள முடியாதது பிடிக்காததாய் விடுவது உண்டு!”

“புதிர் போட வேண்டாம். வாழ்க்கை என்பதுதான் என்ன?”

“வேண்டாமலே கிடைத்த—வேண்டினாலும் நீக்கமுடியாத ஒரு சந்தர்ப்பம் வாழ்க்கை!”

“சந்தர்ப்பமா? எதற்கு?”

“தகுதியான பிறருக்கு மிகுதியான நன்மை செய்ய.”

“நன்மை செய்வதற்கே திறமை வேண்டாமா?”

“தேவை ஏற்பட்டுவிட்டால் திறமையும் ஏற்பட்டுவிடும்—இல்லாவிட்டால் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.”

“வெண்புருக்களே! வேதனையை அதிகமாக்காதீர்! இங்கே நாங்கள் யாருக்கு உதவி செய்வது?”

“மேகங்களே! நன்மை தேவைப்படும் இடம் உயரமல்ல—கீழே! உயரத்திலிருப்பவர்களுக்கே நன்மை தேவைப்படுவதில்லையே — அப்படித் தேவைப்படும்போது செய்தாலும் அது அவர்களுக்குச் செய்வதாகாதே, அவர்களுக்குச் செய்வதின் மூலம் தங்களுக்கே செய்து கொள்வதல்லவா அது!...”

திடுக்கிடும் சம்பவம் ஒன்று திடீரென்று நடந்தது. பேச்சு இடையிலே அறுந்தது. இரண்டு புருக்களும் அபாரமான வேகத்தில் இறக்கைகளை அடித்துக் கொண்டு நிலம் நோக்கி ஓடின. அப்போதுதான் மேகங்களுக்கு உண்மை புலப்பட்டது. எதிரே ஒரு வல்லூறு வேகமாகப் பறந்து வந்து கொண்டிருந்தது.

“உயரத்தைக் கிட்டுபவர்களையே அமைதி விட்டுவிடும் என்பார்கள்.” — புருக்கள் சொன்ன இந்த வாக்கியம் மேகங்களின் நினைவுவானில் வானவில்லாகத் தோன்றி நிலைத்தது. கணப்பொழுதுதான், வானவில் காணுமலே மறைந்து விட்டது; கவலைமேகங்கள் கூடி முழங்கின. புருக்கள் இப்போது புள்ளிகளாகி மறைந்து விட்டன.

“நன்மை தேவைப்படும் இடம் உயரமல்ல--கீழே!” புருக்கள் சொன்ன இந்த வார்த்தைகள் தேனீக்களாகி, மேகங்களின் இதயமெல்லாம் கொட்டத் தொடங்கின. உடனே-உடனே கீழே இறங்கவேண்டும் என்று அவை துடியாய்த் துடித்தன!

கீழே எப்படி இறங்குவது என்று வழி தெரியாமல் விழித்தன மேகங்கள். கண்ணுக்கு வெகுதூரத்தில் இன்னும் சில மேகங்கள் தெரிந்தன. வேகமாக வீசியது காற்று. எந்த வழியாகக் கீழே இறங்கலாம் என்று அந்த மேகங்களைக் கேட்டால் ஒருவேளை அவை வழி சொன்னாலும் சொல்லலாம் என்று அவை நினைத்தன. ஆனல்...? அருகே வந்தபோதுதான் புரிந்தது. மேகங்களல்ல அவை. பரந்து விரிந்து உயர்ந்து கிடக்கும் மலைச் சிகரங்களே அவை!

பெண்ணின் புகைப்படத்தை யாவது பார்க்க வேண்டும் என்று இரங்கிய குரலில் வேண்டிய பிள்ளையாண்டானிடம் அந்தப் பெண்ணையே எதிரே காட்டிப் பேச வைத்தால் அவன் மகிழ்வதுபோல மேகங்கள் மகிழ்ந்தன. சிகரங்களின் உச்சியில் தான் வழியிருக்கும் என்று சிந்தித்துக்கொண்டே இருக்கும் போது அவை தம்மை யறியாமலே உயரே போயின.

குளிர்ந்து குதூகலமடைந்தன உயரே போன மேகங்கள். அழிந்தது பழைய உருவம். அவை தூறல்களாகக் கூடிப் பெருமழையாய்ப் பொழிந்தன. இன்னும் எங்கெங்கிருந்தோ புதுப்புது மேகங்கள் வந்துகொண்டிருந்தன. பெருமழை பொழிந்து கொண்டே இருந்தது!

தங்களின் புதிய நீருருவம் கண்டு மேகங்கள் பூரித்துப் போயின; மலையில் இறங்கியதுமே மகிழ்ச்சி அலைமோதியது; அருவியாகிப் பாறைகளையே சேர்த்து அணைத்துக்கொண்டு பரவசத்தால் ஊர்ந்து ஓடின; அருவி ஓடியது!

இலட்சியத்தை நோக்கி ஓடும் செயலாளி போல,வழியின் இடர்களை அலட்சியப்படுத்தி விட்டு வளைந்து வளைந்து மலையிலிருந்து ஓடியது அருவி.

புத்தம் புது அருவி இத்தனை ஆர்வத்தோடு இறங்குவது கண்டு சித்தம் மகிழ்ந்து சிரித்தது மலை! அந்தச் சிரிப்பு, பாறைகளாய் உருட்டப்பட்டு உடைந்து அருவியுடன் உருண்டு ஓடித் தெறித்தது. இதனல்—குதூகலத்தால் கூச்சலிட்டுப் பறவைகள் மரத்திலிருந்து குபீரென்று எழுந்து பறந்தன. தண்ணீர் குடிப்பதற்காக வந்து கொண்டிருந்த ஒரு வரிப்புலி, நின்று தலையைக் கம்பீரமாகத் தூக்கி விழியின் ஓரத்தைத் திருப்பியது! ஒரு மரத்தின் கிளையிலிருந்த தேன்கூட்டினின்று தேன் வழிந்து கொண்டிருந்தது. வரிப்புலியின் வாயில், இக்காட்சியைக் கண்டு உமிழ்நீர் ஊறியது; வழிந்து கொட்டிய தேனையெல்லாம் இழுத்துக் கொண்டு ஓடியது அருவி. ஓர் இடத்தில் அருவியின் தண்ணீர் குடிக்க வந்த மந்தி இந்தத் தேன் மதுவை அள்ளி அள்ளிக் குடித்தது—போதை தலைக்கேறியது-நிலை தடுமாறியது; துள்ளிக் குதித்து ஓடி எதிரே வந்த ஒரு கரடியைப் பெண்குரங்கென்று கருதி கட்டியணைத்து அது முத்தமிட்டது!...

செங்கேன் சிந்தும் இந்தக் காட்சியெல்லாம் கண்டு சிந்து பாடிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தது அந்தச் சிங்கார அருவி!

அருவி மலையைவிட்டு இறங்கி மேட்டில் வெகுதூரம் கடந்து வந்தது. அகலமாக விரிந்து கிடந்த மேட்டைக் கண்டு தானும் அகலமாகப் பரவித் தன்னுடைய ஓட்டத்தைப் பெருநடையாக மாற்றி வந்து கொண்டிருந்த அருவி, மேட்டின் இறுதியைக் கண்டது. பல நூறு அடிகளுக்குக் கீழே அடிநிலம் தெரிந்தது. பெருங்கூச்சலிட்டு ஆனந்தத்தோடு கீழே குதித்தது அருவி!

“அருமையான நீர்வீழ்ச்சி!”-என்று யாரோ கூவினர்கள், பார்த்தது அது!

எவ்வளவோ ஆண்களும் பெண்களும் நீர்வீழ்ச்சியின் எழில்வீச்சைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருந்தனர். பார்த்துக்கொண்டே சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர் பலர்--சிரித்துக்கொண்டே பார்த்து அதில் குளித்துக் கூத்தடித்தனர் பலர். புலவர் ஒருவர் சளசளவென்று பேசத் தொடங்கி விட்டார்.

“மலைச்சாரல்களிலே குதித்து வரும்போது அருவி!—மேட்டிலே யிருந்து பள்ளத்திலே பாயும்போது நீர்வீழ்ச்சி! —விழுந்த நீர்வீழ்ச்சி சமவெளியில் நடந்து செல்லும்போது ஆறு!—என்ற முப்பேரும் முகில்களே! உங்களுக்கு முப்பேரு?”

—புலவர் இவ்வாறு பேசிக் கொண்டே இருந்தார்.

வேர் விடும் உற்சாகத்துடன் நீர்வீழ்ச்சி நீண்டு நெளிந்து வளைந்து ஆருக ஓடியது!

அது பட்ட இடமெல்லாம் பயிர்; தொட்ட இடமெல்லாம் உயிர்; தட்டுப்பட்ட மண் எல்லாம் கட்டிப் பொன்னுகி கலுக்கெனச் சிரித்தது. வெள்ளத்தின் உள்ளத்தில் களிப்பு, கரை புரண்டது. அதனல், கரைகள் ‘இடி இடியெனச்’ சிரித்து ஆற்றுடன் கரைந்தன—மறைந்தன!

புதிய இடத்திற்கெல்லாம் ஆறு அதிக வேகத்துடன் நடந்தது. கூடினர் மக்கள். பாடினர் பாக்கள். சித்திரம் தீட்டினர். பித்தர் போல் ஆயினர். ஆடினர். ஓடினர். குதித்தனர். கூவினர். வாழ்த்தினர். வணங்கினர்.

வற்றிய இடமெலாம்
வாழ்வு பற்றியது!
வறண்ட இடமெலாம்
வளமை புரண்டது!
பாலைவனம் சோலை
வனமாகியது! அதில்—

காலை மாலை, பகல் இரவு—எல்லா வேளைகளும் பறந்தன; மறந்தனர் மக்கள்! வானம் உருகும் கானம் பிறந்தது, பிரிந்து தனியே ஆண்களைக் காண முடியவில்லை —அச்சோலைவனத்தில், பிரிந்து தனியே பெண்களைக் காண முடியவில்லை! ஆனல்...? ‘ஆண்-பெண்’ கூட்டம் பொங்கும் அந்தக் கானகத்தில் மங்காத கானமாகி எங்கும் காணப்பட்டது!

“உணர்ந்தேன் வாழ்க்கையை —வாழ்க்கையை உணர்ந்தேன்” —என்று சொல்லிக்கொண்டே உவகையின் உருவமாய் உருண்டு ஓடிய ஆற்றைக் கடல் தாய். அப்படியே இறுக்கி உச்சி மோந்து தன் உடலில் ஒன்ருக்கிக் கொண்டாள். அந்த ஆனந்தத்தால் கடல்தாயின் உடலில் ஏற்பட்ட சிலிர்ப்பு, அலைகளாய்ச் சிரித்தது! ★

குழந்தைகள் செய்தி

வாரப் பத்திரிகை

★ அன்ருடச் செய்திகள்
★ அறிவு வளர்ச்சிக்கேற்ற விஷயங்கள்
★ பழங்காலக் கதைகள்
★ நவீனக் கதைகள்
★ வேடிக்கை, விசித்திரங்கள்

—இத்தனையும் சிறுவர்களுக்காக எளிய தமிழில் குழந்தை மனேதத்துவத்தில் பேரிதும் அனுபவம் வாய்ந்த அறிஞர்கள் எழுதுகிருர்கள்.

விலை : அணு ஒன்று. வருட சந்தா : ரூபாய் மூன்று.

ஜூலை 15-ல் வெளி வருகிறது!

பிரதி ஒன்றுக்கு எட்டணு வீதம் முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. தினசரிப் பத்திரிகை விற்பவர்களுக்குச் சலுகை காண்பிக்கப் பெறும்.

சக்தி காரியாலயம்,
ஆயிரம்விளக்கு, சென்னை - 6.

SOUTHERN NEWS
23, NARASINGAPURAM ST., MOUNT ROAD, MADRAS



29. துணிந்தவருக் கில்லை துயர்.

வெண்பாப் போட்டி 29-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் சென்ற இதழில் வெளியிட்டோம். இந்த இதழில் மேலும் சில தகுதியுடைய வெண்பாக்களை வெளியிட்டுள்ளோம்.

இன்பத்தைக் கண்டு இளகாத திண்ணியர்கள்
இன்னலைக் கண்டால் இகழ்வரோ-என்றும்
அணிவகுத்துத் துன்ப மடுத்தாலும் உள்ளம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—சி. பி. சாமி, அரக்கோணம்.

★

சிங்களத்தைச் சீராக்கித் திங்களைப்போல் வாழ்தமிழர்
எங்குமில்லா இன்னலினை எய்துகின்றார்-சிங்கம்
பணிந்துதான் வாழுமோ? பங்குரிமை எய்தத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—கு. வே. இராமகோடி, சென்னை-7.

★

ஆழக் குழிதோண்டி அன்னையாம் எம்தமிழை
வீழ வழிசெய்யும் வீணர்காள்-சூழப்
பணிக்களரி கொண்டேயெம் பைந்தமிழ் காக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—ஆ. காயம்பூ, விருதுநகர்.

★

காணி நிலமின்றிக் கல்லுடைக்க நேர்ந்தாலும்,
பேணி வளர்ப்பிலராய்ப் பிச்சைக்கே-நண்ணிடினும்
நாணில் மடவார் நயந்துபின் விட்டாலுந்
துணிந்தவருக் கில்லை துயர்.

—வள்ளுவனடிப்பொடி, வேம்பன்பட்டி.

★

உள்ளக் கருத்தேன் ஒளித்தாய் மரகதத்துக்
கிள்ளையே சூழல் கெடுத்ததோ-எள்ளப்
பணிந்தவருக் கில்லையிப் பாரிலுயர் வாழ்வு
துணிந்தவருக் கில்லை துயர்.

—ஆ. அழகன், புதுச்சேரி.

★

கற்றோருக் கில்லை அவையஞ்சல்; கல்லாத
மற்றோருக் கில்லை மதிநுட்பம்-முற்றும்
முனிந்தவருக் கில்லை முகங்கொள்ளல்; என்றுந்
துணிந்தவருக் கில்லை துயர்.

— மு. ப. சங்கரலிங்கம், உடுமலை வடுகபாளையம்.

★

கூடிப் பிரிவதுநம் கொள்கையல்ல இல்வாழ்வை
நாடி அமைத்திடுவோம் நங்காய்கேள்-தேடி
அணிமலைபோல் துன்பங்கள் அடைந்தாலும் அஞ்சோம்,
துணிந்தவருக் கில்லை துயர்.

—வி. ப. கோவிந்தசாமி, சென்னை-12.

★

மண்ணிற் பெரிய மதகரி மீதுபாயும்
திண்மை தனைப்பெற்ற சிங்கம்போல்—கண்ணே
பணிதனைச் செய்யுங்காற் பற்றுமிடர் போக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—ச. குருசாமி, சத்திரப்பட்டி.

தர்ப்பை பிடித்தோர்கள் தாக்குதலும் சாதியெனும்
அற்ப மனங்கொண்டோர் ஆத்திரமும்-கற்பை
அணிந்தவளே என்செய்யும்? ஒன்றாக உள்ளம்
துணிந்தவருக் கில்லை துயர்.

—மு. தமிழரசு, திருப்புத்தூர்.

★

வேலைப் பிடித்திடும் வீரனுக்கு வேதமில்லை;
ஓலைக்கு வாசமில்லை; ஒன்றாரின்-காலைப்
பணிந்தார்க்கு வெட்கமில்லை; பன்முறை எண்ணித்
துணிந்தவருக் கில்லை துயர்.

—மு. இளமாறன், பி. ஏ. மதுரை.

★

முத்தாக் கடல்சூழ் முத்தமிழ்த் திருவிடத்தை
எத்தர் இடத்திருந்து எஞ்ஞான்றும்;-காத்திடவே!
தனியரசு பேணித் தன்னுயிரை யீந்துவக்கத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—செ. சீனிவாசன், சலகண்டபுரம்.

★

தகைசால் தமிழா! தரித்திரத் தோழா!
புகைபடு பூவாய்ப் புகைந்தாய்-பகைக்குப்
பணிந்திட்ட வாழ்வதுவும் வாழ்வோ? பாராய்,
துணிந்தவருக் கில்லை துயர்.

—சோ. செல்வம், உத்தமபாளையம்.

★

பொருளில் கருத்தினைப் போற்றிவாழ் மாந்தர்
பொருளில் வறியராய்ப் போவார்-அரும்பூண்
அணிந்தவளே எக்கருத்து(ம்) ஆய்ந்துபின் கொள்ளத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—அருளாளன், மதுரை.

★

அணியாதார்க் கில்லை அழகு! மனமோ
கனியாதார்க் கில்லை கருணை-கனியே!
பணியாதார்க் கில்லை பலனும்; எதற்கும்
துணிந்தவருக் கில்லை துயர்.

—எஸ். கருப்பையா, மதுரை.

★

பட்டம் பதவியெனில் பாய்ந்தவற்றைக் கவ்வுமவர்
குட்டக் குனிந்திடுவார் கொல்வடக்கு-விட்டே
தனித்தியங்க வேண்டார் தவறென்பார் அந்தத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—அ. இரத்தினசாமி, கோவிலூர்.

★

பயிராம் மொழிதமிழைப் பக்குவமாய்க் காக்க
உயிரை உறிஞ்சிடினும் உள்ளத்-துயிலா
அணிவகுப்பில் ஆண்மைப் பணிபுரிவேன் அன்பே
துணிந்தவருக் கில்லை துயர்.

—அமுதன், சிக்கருயபுரம்.

★

மந்திக் குணம்படைத்தோர் வல்லமை யாற்கொணரும்
இந்தியை நந்தமிழர் ஏற்பரோ?-செந்தமிழா
பணிந்திடும் வடக்கு! வாளெடு வதைத்திட!
துணிந்தவருக் கில்லை துயர்.

—வளவன், கிணவை.

★

தென்றல் நடையால் இருக்கூத்தின் பண்புடையோர்
இன்றே அரசாள்தல் இயலாதோ-ஈதறியாத்
துச்சனராம் ஓர்சிலபேர் தூற்றுவதால் அஞ்சுவமோ
துணிந்தவருக் கில்லை துயர்.

—என். இராமசாமி, தண்ணீர்பந்தல்பாளையம்.

★

பின்மறைந் தம்பெய்திப் பீடிழந்தான் ராமனவன்
முன்சென்(று) உயிர்நீத்தான் முத்தமிழன்;-முன்னோர்
தனியரசை மீட்கும் தலைப்போரில் துஞ்சத்
துணிந்தவருக் கில்லை துயர்.

—ந. செனார்த்தனன், அரக்கோணம்.

★

காதற் சுவையறியாக் கன்னெஞ்சர் கூற்றுவுடன்
போதற்குப் பொல்லாத் தடையாமோ?-மாதே!
பணிந்தவருக் கென்றுந் துயரங்காண்; பாரில்
துணிந்தவருக் கில்லை துயர்.

—என். கணபதி, நத்தம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.